
"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

# பெண்

தொகுதி : 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி : 29

# பெண்

2024

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை**

இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு.

T.P No. : 065-2223297
Fax No.: 065-2224657
e-mail : suriyaw@slt.lk
suriyawomen1991@gmail.com

## THE WOMAN

A Journal Published by
**Suriya Women's Development Centre,**

ஆசிரியை:
**விஜயலட்சுமி சேகர்**

அட்டை ஓவியம்
**விதுஷானா**

கணினி வடிவமைப்பு:
**அ.கிறிஸ்டினா**


அச்சகம்:
**வணசிங்க அச்சகம்,**
**496A, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

விலை : 200/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களுடன்...



**வா**சகர்களை 'பெண்' சஞ்சிகைக்கூடாக தொடர்ந்து சந்திப்பதில் மகிழ்ச்சி. இச் சஞ்சிகையானது தொடர்ந்து வெளிவருவதற்கு முக்கிய காரணம் வாசகர்களும் பெண்ணியச் சிந்தனையாளர்களுமே. ஏனெனில் ஒரு சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவருவதென்பது பலரது அர்ப்பணிப்புக்களுக்கூடாக விளங்கிக் கொள்தலுக்கூடாக புரிதலுக்கூடாக நடைபெறுவது. 'பெண்' சஞ்சிகையும் பல சவால்களை எதிர்கொண்டே தனது பயணத்தை மேற்கொள்கிறது.

இன்றைய காலகட்டமானது மிகவும் வேகமானது. பாரமானது. அனைத்தும் ஆய்வுக்குட்படும் முன், சிந்தித்து திருப்பிப் பார்க்கும் முன் மின்சாரத்திற்கிணையாக உந்தித் தள்ளுகிறது நவீன தொழில்நுட்ப வளர்ச்சி.

'பெண்' பல சவால்களை எதிர்கொண்டபடி சஞ்சிகை வெளிவருவதற்காக எழுத்தாளர்களுடன் தொடர்பு கொள்கையில் சில பெண் குரல்களில் பெண்களுக்கான ஒரு சஞ்சிகையாவது வெளிவருவதன் முக்கியத்துவம் அவர்களால் விளங்கிக் கொள்ளப் படவில்லை என்பது புரிகிறது. தாம் ஒரு எழுத்தாளர் என்பதை பதிப்பதற்காக சுடச் சுடவோ அல்லது பிரபல்யமானதோ அல்லது அடையாளத்தை வெளிப்படுத்தவோ ஏதாவது தளம் இருந்தால் போதும் என்ற எண்ணக் கருவில் அவர்கள் இருப்பதை உணர்கிறோம்.

எனினும் பல தோழிகளினதும் பெண்ணியச் சிந்தனையாளர்களாகிய ஆண் படைப்பாளிகளின் விளங்கிக்கொள்தலும் ஆர்வமும் சஞ்சிகை தொடர்ந்து தன் குரலை நிலை நிறுத்தி வருவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மக்கள் வாழ்தல் என்பது பல விதமான மாறுதலுக்குள்ளாகிறது. மறுதலிக்கப்பட்ட பல விடயங்களின் நியாயங்கள் காலப்போக்கில் புரிகிறது. எனினும் இன்னும் புரிதல் இல்லாது வாழும் சூழலுக்குள் தாம் எதிர்கொள்ளும் வலிகளை துணிந்து சொல்வதற்கு 'பெண்' ஒரு தளமாக செயல்படுகிறது.

'பெண்' சஞ்சிகையானது, பல புதிய படைப்பாளிகளை இனம் கண்டு தன்னுடன் அழைத்துச் செல்கையில் இளைய தலைமுறை படைப்பாளிகளுக்குள் உருவாகும் ஆர்வம், பெண்கள் உரிமைக்காய் கடந்தகாலத்தில் உழைத்த பெண்ணிய வாதிகளுக்கு சமர்ப்பணமாகும்.

இச் சஞ்சிகையிலும் பல இளம் படைப்பாளிகள் தமது குரலை துணிந்து பதிக்கின்றனர். இளம் வயதில் எதிர்கொண்ட சவால்களை நான்கு சுவர்களுக்குள்ளும் மூடிய ஜன்னல்களுக்குள்ளும் புதைத்து வைத்துவிட்டு வாசலில் வரும் இளம் காலை சூரியனை அனுபவிக்க முடியாது அவஸ்தைப்படும் பல பெண்கள். இவர்களை தினம் தினம் காண்கிறோம். அதனை கொட்டித் தீர்த்தபின் மறு நாள் வரும் தென்றலை இவர்களால் முழுதாய் அனுபவிக்க முடிகிறது. 'பெண்' தனது பயணத்தை எழுத்துக்களுடன் மட்டும் முடித்துக் கொள்வதில்லை. கூடவே இருந்து உணர்வுகளை பகிர்ந்து கொள்கிறது. தொண்டைவரும் அழுத்தங்கள் தமது எழுத்துக்களை இயங்கவைக்காத போது 'பெண்'ணுடன் இருக்கும் தோழிகள் அவர்களுக்காக எழுதுகிறார்கள். இதுவே 'பெண்'ணினது செயல்வாதம் ஆகும்..

**- ஆசிரியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


» மறுவாழ்க்கையின் பாதை
» வாழ்வின் சொர்க்கம் - கவிதை
» கனவுகளைப் பிரசவிப்பேன் - கவிதை
» அந்த ஆறாயிரம்
» நடையின் 365 ஆம் நாள்
» பொருளாதார நெருக்கடியும் அதன் தாக்கங்களும்
» கொடி
» பெண் சஞ்சிகை
» மனித இனம்
» பங்குடாவெளி
» பிரஞ்சு பெண்ணியத்தின் முன்னோடி
» மடமை
» நடத்துனர்
» தடங்கள்
» ஆகாத மலர்களே!
» ஓவியங்கள்
» தாய்த் தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வமாடிகள்
» மஞ்சு மேரி
» அவுரி
» ஆளாகிவிட்டேன்
» ஏற்க மறுக்கிறது
» மனிதம் உயிர் வாழ்கிறது
» விழித்திடு பெண்ணே!
» தனிமை விரும்பி
» சவுக்கடி வீடு
» சிந்துவின் கதை
» சுயமரியாதை
» மறுவாழ்வு | வினா - கவிதை
» "ஒரு பிராயச்சித்தம் நூறு சரிகளுக்குச் சமம்"
» குழந்தைகளின் அவலம்
» இலங்கையில் சாதி ஆதிக்கம்
» இளையோர் கடன்



# மறுவாழ்க்கையின் பாதை

இலங்கை முழுவதும் பல்லாயிரம் ஆண்டுகள் காலனித்துவம் என்றால் அடிமைத்தனத்திற்கே இலக்கணமானது மலையக மக்களின் 200 வருட வாழ்க்கை. கோப்பி பயிற்செய்கைக்கு என 1815 இல் தென்னிந்திய பண்ணை அடிமைகளை அகதிகளாய் கப்பலேற்றி மன்னார் தரை தொட்டு ஈரமின்றிய சருக்குகளில் கால் நடை பவனியாய் தென்னிந்திய இரத்த உறவுகளை பிரிந்த சோகமும் ஏக்கமும் கண்களில் ததும்பிக்கிடக்க, பவனியில் பல்லாயிரம் உறவுகளை பறிகொடுத்து மலையக மண்ணை தோட்ட மக்களின் துயர் என்றும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததே.

கோப்பியில் தொடங்கிய வளர்ச்சி சில காலங்களே கை கொடுத்தது. பின்னர் தளர்ந்து விடாது தேயிலை கம்புகளுக்கு கை, கால் தசைகளை இரையாக்கி துயரின் தொடர்ச்சியாய் இறப்பர், ரயில் பாதை அமைத்தல் என நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தம் ஊனை உரமாக்கிய மலைச் சிகரங்களின் சின்னங்களை நான் தியாகிகள் என்றே சொல்வேன்.

**"கோண கோண மலையேறி**
**கோப்பி பழம் பறிக்கையில**
**ஒரு பழம் தப்பிச்சுனு**
**உதச்சார் ஐயா சின்ன துரை"**

1815 - 1920 வரை வெள்ளையர்களின் தேயிலை தோட்டங்களில் அடிமைத்தனம் வாட்டியதே தவிர, சொந்த மண்ணின் பண்ணை அடிமை வாழ்வின் தள்ளுகையோ இலங்கையின் வேலை வாய்ப்பு மற்றும் போதுமான சம்பளம் என்ற பொய்யுரையின் ஈர்ப்போ இறுதியில் மலையக மக்களுக்கு வாழ்வளிக்கவில்லை மாறாக வாழ்நாள் முழுதும் போராட்டங்களையும் கண்ணீரையும் பரிசளித்தது.

## வாக்குரிமை

1920ல் இந்திய சுதந்திர போராட்டத்தை யொட்டி இந்திய வம்சாவளியினரான மலையக மக்களிடம் நிதி சேர்க்கும் நோக்கில் இலங்கை வந்தவர் கோ.நடேசய்யர். மலையக மக்களின் துயர் நிலை கண்ட நடேசய்யர் மலையக மக்களின் வாழ்வியல் நிலையில் நிதிசேர்க்கும் நோக்கில் தோல்வியுற்றாலும் தம் வம்சாவளி மக்களின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனும் நோக்கில் பணியாற்றி மலையக மக்களுக்கான முதலாம் தொழிற் சங்கத்தை உருவாக்கிக் கொடுத்தார். மேலும் 1931 ம் ஆண்டு மலையக மக்களுக்கு சர்வஜன வாக்குரிமைக்கான உரிமையை தர முன்வரக்காரணம் நடேசையரால் உருவாக்கப்பட்ட அரசியல் அடையாளமான இந்திய இலங்கை தோட்டத்தொழிலாளர் சம்மேளனம் ஆகும்.

1947 இலங்கை முழுவதும் சுதந்திரம் கிடைத்த பின் மலையக மக்களுக்கு மீண்டும் கொடுக்கப்பட்ட சர்வஜன வாக்குரிமைக்கான உரிமை பறிக்கப்பட்டு இந்திய வம்சாவழியினரை மீண்டும் இந்தியாவுக்கே திருப்பி அனுப்பும்படியான கோரிக்கை முன்வைக்கப் பட்டதுடன் காலப்போக்கில் கோரிக்கை கலவரமாக உருவெடுத்தது. பின் நாட்டின் அரசாங்கமும் மலையக மக்களை மீண்டும் இந்தியாவுக்கே திருப்பி அனுப்பும் பணிகள் இடம்பெற இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தமே ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் ஆனது.

## ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம்

திருப்பி அனுப்பும் பணியின் போராட்டங்களில் சில ஆண்டுகள் கழிய 1964ம் ஆண்டு ஸ்ரீ மா சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையக மக்களை பண்டங்களாக பரிமாற்றிக் கொண்டனர். அழைத்து வரப்பட்ட பல்லாயிரக் கணக்கானோரில் அரைவாசினரை மட்டும் ஏற்றுக்கொள்வதாகவும் ஏனைய அரைவாசியினரை இந்தியாவுக்கே திருப்பி அனுப்புவதாகவும் முடிவுசெய்யப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட மக்களை மீண்டும் இந்திய அரசாங்கம் ஏற்க மறுத்தமையே ஆகும்.

மேலும் இவ்வொப்பந்தத்தில், "திருப்பி அனுப்பப்படுபவர் வேலை செய்பவராக இருப்பின் அவர் திருப்பி அனுப்பப்படும் வரை அல்லது 55 வயது வரை பணியில் ஈடுபடலாம் எனவும்,நாடு கடத்தப்படும் சந்தர்ப்பத்தில் அவர்கள் எடுத்துச் செல்லும் சொத்தளவு ரூ,4000 ஆகவே இருக்க முடியும்" எனவும் ஒப்பந்த மிடப்பட்டது. இதற்கமைய 1954 ல் 184,771 பேர் நாடு கடத்தப்பட்டனர். நாடற்றவராக ஒப்பந்தமிட்டு ஏற்றுக்கொண்டனரே தவிர நாட்டில் உரிமையற்ற வாழ்வே நிலவியது. அதனைத்தொடர்ந்து, 23 வருட போராட்டங்களின் பின் 1977 ஆண்டு வாக்களிக்கும் உரிமையை மலையக மக்கள் முழுமையாக அனுபவிக்கத் தொடங்கினர்.

வாழ்வியல் முன்னேற்றத்திற்கே இத்தனை போராட்டங்கள், இம்மக்களின் போராட்டங் களுக்கான முடிவு முழுமையானதா என்றால் இன்னும் இல்லை. இன்னும் மலையக மலைகளின் சத்தத்தோடு சேர்ந்து ஒலிக்கும் அழுகையும் குமுறலும் போராட்டங்களும் முடிந்த பாடில்லை. ஆதிபடையான வாழ்க்கைக்கே இத்தனை போராட்டங்கள் என்றால் இம்மக்களின் கல்வி நிலை கேள்விக்குறிதானே?.

## மலையக கல்வியும் பொருளாதாரமும்

மலையகப் பகுதியில் கல்வி என்ற ஒரு உரிமை அறிமுகப்படுத்தப்படும் முன்பே அழைத்து வரப்பட்ட காரணமும் நாட்டில் தனித்து கிடைத்த ஒடுக்குமுறையும் மாறாத தாக்கத்தையே மக்களிடத்தில் ஏற்படுத்தியுள்ளது. ஒருவேளை உணவிற்கு முழு நாளையும் அர்ப்பணித்தால்தான் ஓரளவேனும் உயிரை தக்க வைக்க முடியும் என்பது மலையகத்தில் மனிதனாய் பிறந்த யாவரும் அறிந்ததே இப்படி இருக்க கல்விக்காக ஒரு செலவு ஈடாகுமோ?

ஒரு தோட்டத் தொழிலாளி பெரும் சம்பளப் பணத்தை ஆயிரம் ரூபாவாக அதாவது 200 ரூபாய் அதிகரிக்க எத்தனை போராட்டங்கள்! நியாயப்படி ஊதியம் வழங்கவே சலனப்படும் நிறுவனங்களும் இன்றைய முதலாளித்துவமும் மிகையாய் சித்தரிக்கப்பட மனித உள்ளத்தின் நாட்டம் வறுமையை நின்று நீங்க வழி ஏதேனும்

வேலையில் தேடுமா இல்லை காலம் செலவிட்டு கல்வியில் தேடுமா? இந்தக் கேள்விக்கான விடையை நாம் தேடினாலே மலையக மக்கள் மனதில் கல்வியை குறித்த எண்ணம் எத்தகையது என்றும் இம்மக்களில் பொருளாதார நிலையின் தாக்கத்தையும் தெளிவு படுத்திக் கொள்ள முடியும்.

வாழ்வினை வாட்டிய பொருளாதாரத்தின் மறுமை சொன்ன வழிதான் நுண்கடன். காலப்போக்கில் பல குடும்பங்களில் நுண்கடன் என்பது பிரசித்தமானதாக காணப்பட்டது. எப்படியாயினும் கடன் பணத்தினைக் கட்ட முடியாத இறுக்கம் பிள்ளைகளையும் இறுக்க பிள்ளைகள் தலையிலும் பல வீடுகளில் பாரம் இறக்கி வைக்கப்பட்டது. இதன் விளைவாக வேலைக்கு அனுப்பப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை ஒப்பிட்டளவில் அதிகம்தான். இன்றும் இச்சமூகத்தில் இந்நிலை விட்டுப் பிரியாத வண்ணமே உள்ளது.

கிராம சேவகரின் கருத்தின்படி, மலையகத்தில் உள்ள பல பிள்ளைகள் குடும்பக் கடனை அடைப்பதற்காக வேலை தேடி கல்வியை கைவிடுகின்றனர்; மற்றும் இந்நிலையில் கொழும்பினில் வேலை வாய்ப்பு நிறுவனங்களின் தரகர் தலையீடு இலகுவாக்கப்படுகிறது என்பது இங்கு கவனம் செலுத்தப்பட வேண்டியதாகவும் அனைவரிடையேயும் புழக்கத்தில் உள்ள ஒரு விடயமாகவும் உள்ளது.

அதுமட்டுமல்லாது அது பல குடும்பப் பெண்கள் வறுமை காரணமாக வெளிநாடு சென்று விடுகின்றனர் ஒரு குழந்தை குறிப்பிட்ட வயது வரை பெற்றோரின் பிடியிலிருந்து உருவாக்கப்பட வேண்டியது மலையகத்தில் மட்டுமல்ல எங்கும் எல்லா இடங்களிலும் மிகவும் அவசியமான ஒன்றுதான். ஏனெனில் சீர்குலைந்த சமூக சூழலில் ஒரு குழந்தையினை நெறிப்படுத்த எவரேனும் ஒருவர் அருகில் இருப்பது இன்றியமையாதது அவ்வாறு இல்லையெனில் குழந்தைகளின் சிந்தனை, செயல் என்பன வழமைக்கு மாறாக மாற்றப்படுவது இயல்பான விடயம்தானே.

மேலும் இவ்வாறு வெளிநாடு செல்லும் பழக்கம் உள்ள குடும்பங்களில் பல இடங்களில் பல குடும்பங்கள் விவாகரத்தை நோக்கி பயணித்து விடுகின்றனர். இன்றைய காலத்தில் விவாகரத்து என்பது பழகிப்போனதொரு விடயமாயிற்று. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தாய் தந்தை இருவராலும் கைவிடப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகமாகவே மலையகத்தில் பதிவு செய்யப்படுகிறது. இப்படியாக தனித்து விடப்பட்ட பிள்ளைகளின் நிலைதான் என்ன? தன் வாழ்க்கையை தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் சமூகத்திலும், குடும்பத்திலும் கொண்டுள்ள வெறுப்பும் பல குழந்தைகளிடத்து கல்வியிலிருந்து தம் வாழ்வையும் தம்மையும் விலக்கிக் கொள்ள காரணமாகிறது.

இவ்வாறு பொருளாதார ரீதியில் பிள்ளைகளின் கல்வியும் மலையக சமூகமும் பாரிய அளவில் மாற்றத்தையும் தாக்கத்தையும் அன்று முதல் இன்று வரை சந்தித்துக் கொண்டே வருகிறது.

## மறைக்கப்படும் சாதியும் வாழ்க்கை அனுபவமும்

சத்தியம் என்ற சொல்லை பிறர் வாய் நின்று கேட்டாலே தம் காதுகளை மூடிக்கொண்டு நுண்ணிய செயலிலும் அடிமைத்தனப்படுத்தும் கர்வம் பெருமிகையாய் கொண்டு எல்லோரும் சமம் என்கிற போலியான முகமூடியை அணிந்து நடமாடும் சமூகம் இது. ஒடுக்கும் சமூகமும் ஒடுக்கப்படும் சமூகமும் தான் செய்யும் காரியம் இன்னதென்று அதாவது தாம் ஒடுக்குவதையும் ஒடுக்கப்படுகிறோம் என்பதையும் தைரியமாய் சொல்ல முடியாமைக்கு காரணம் இதுதான் என குறிப்பாக கூறிவிட முடியாது. எனினும் ஒடுக்கப்படும் சமூகத்தினர் குரல் எழுப்பினாலோ அல்லது ஒடுக்குபவர் தாம் ஒடுக்குவதை கூறமுனைந்தாலோ தன்மானம் பறிபோய்விடும் என்னும் சிந்தனையாகவும் மக்கள் அனைவரும் சரிசமம் என துணித்தால் ஏதோ ஒரு முடிவு கிடைத்து விடும் எனும் அச்சமாகவும் இருக்கலாம். ஒடுக்கப்படும் சமூகத்தினருக்கு சம முடிவு என்பது சந்தோஷம்தானே என்றால் அதிலும் வாய்ப்புகள் மறுக்கப்படும். தேவைகளுக்கே முன்னுரிமை இல்லாத போது சம உரிமை கோர ஏது உரிமை என்னும் சலன எண்ணமும் காரணமாக இருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்காக அறிந்து கொள்வதற்காக சாதியம் குறித்து எவரிடமேனும் கேட்கும் தருணம், சாதியமா? அப்படி எவரும் இங்கு பார்ப்பதில்லை. என்ற பதிலின் நிமித்தம் உண்மையாகவே இல்லை எனக் கொள்ள முடியுமா? நிச்சயமாக இல்லை சாதி என்ற சொல்லின் பொருள் அறிந்திடும் முன்பிருந்து கண்ணோக்கிய பல காரியங்களின் பொருள் சாதியத்தின் பொருள் விளங்கிய பின்பு தான் தெளிவாகிறது.

## தொழில் ரீதியில் சாதியின் பிடி

மலையகத்தில் தொழில் ரீதியில் சாதி என்பது தலைசிறந்தது மட்டுமின்றி தலைமறைவாய் இயங்குவதும் கூட... ஆரம்ப காலங்களில் கங்காணிமாரின் கீழ் வேலை செய்த மக்களிடையே கங்காணிமார் உயர்ந்தோராகவும் தாம் ஒடுக்கப்பட்ட சமூகமாகவும் வாழ்ந்த வழக்கம் உண்டு. அன்று ஒடுக்கப்பட்டோர் என்னும் ரீதியில் அடிமைத் தனத்தில் வாடியவர்களிடையேயும் இன்று சாதிய ரீதியில் பிளவு உண்டு என்பது வேடிக்கைதான்.

மலையகத்தை பொருத்தமட்டில் சுற்றுலா ரீதியில் பிரசித்தம் என்பது மட்டுமல்லாது நகர சபையின் சுத்திகரிப்பு பணியின் பங்கு போற்றத்தக்கது. ஆனாலும் சமூக ரீதியில் இத்தொழிலாளர்களின் நிலைமை தான் என்ன? இவர்களுக்கும் சம உரிமையா? என்றால் என் பதில் இல்லை என்பதே! பொதுவான ஒரு நிகழ்வாயினும் ஒடுக்கப்படும் நிலை கண்களால் நான் கண்டதே... பொதுவான தெரு தொடர்பாடல் ஆனாலும் சரி நிறுவன தொடர்பாடல் ஆனாலும் சரி உடல் குறுகி நிற்கும் நிலை சில நேரங்களில் புலப்படுத்தி விடும் சமூகத்தின் சாதியின் கட்டமைப்பை....

இது என் அனுபவத்தால் கண்டது என்றால் இன்னும் பல தொழிலாளர்கள் வாழ்வியல் ரீதியில் மக்கள் பிரிக்கப்பட்ட நிலை எவரும் கூற முன்வரவில்லை என்பதனால் பொய்யாகி விடாத என்றோ!

**படிப்பை தொடர பணம் இல்லை**
**தானாய் இறங்கியது பொறுப்பு**
**என் தந்தையின் மரணத்தின் பின்**
**மூத்தவன் ஆனேன்**
**மூட்டை தூக்கினேன்**
**தம்பி தங்கை அம்மா என**
**பொறுப்பு கூற...!**
**படித்த பட்டத்துக்கு கிடைத்த**
**வேலையாயினும் சரி**
**சந்தர்ப்பத்தில்**
**வேலை கிடைத்தால் சரி -என்ற**
**என் தத்தளிப்பில்**
**ஊரை சுத்திகரிக்க இறங்கினேன் - அன்று....!**

**சமூகம் ஒதுக்கியது**
**நண்பர் கூட்டம் ஒதுக்கியது**
**உறவுகளும் ஒதுக்கியது**
**இன்றும் ஒதுங்கி வாழ்கிறேன்**
**எல்லாவற்றிலும் ஒதுக்கப்பட்டவனாய்**
**மனம் தூய்மை இல்லாத இடத்தில்**
**நிலத்தை தூய்மை செய்து என்ன பயன்**
**என்ற விரக்தியில்...!**

## பாடசாலை இணைப்பில் சாதியம்

பாடசாலைகளில் பிள்ளைகளை ஆரம்ப பிரிவில் சேர்க்க கூட பெற்றோரின் கல்வித் தகைமை, தொழில் மற்றும் வசிக்கும் இடம் என்பன செல்வாக்கு செலுத்துகிறது என்றால் புதினம் தான். ஆனாலும் பல குடும்பங்களில் இன்று இதுதான் நிலைமை... தங்களுக்குத்தான் கல்வி பயில்வதற்கான வாய்ப்பு வசதியும் கிட்டாத துயர் மறைத்து பிள்ளைகளை யாவது கல்வியில் உயர்த்தி அடிமைத்தனம் நின்று விலக்கிக் கொள்ளும் எண்ணத்தில் தோல்வியையே பல குடும்பங்கள் சந்திக்கிறது என் குடும்பமும் சந்தித்தது.

இவ்வாறு பாடசாலைகளில் பிள்ளைகளை இணைக்க கொண்டுள்ள கட்டுப்பாடுகளுக்கும் விதிமுறைகளுக்கும் செயலுக்கும் ஆயிரம் காரணங்கள் கூறினாலும் சமூகத்தில் கல்வி தேவையான இடத்தில் மறுக்கப்படுகிறது என்றால் ஒடுக்குமுறை என்பதைத் தவிர என்னவென்று கூற? இவ்வாறு சிறு பிள்ளையின் வளர்ச்சி யிலேயே தலைதூக்கும் சாதியை இல்லை என சாதிப்பது பொருத்தமாகுமா?.

**- கபிலாஷினி**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் சொர்க்கம்

நான் நினைக்கவில்லை
இப்படி அமிழ்ந்து
போவேன் என்று
நரகத்துக்குள்
வாழ்க்கையின்
சொர்க்கத்தை
தேட
சாண் ஏறிய போது
முழம் சறுக்கினேன்
ஏணி மேல் ஏற்றி
விட்டவர்கள் எல்லாம்
ஏணியின் பலகைகள்
போல
எனது அவயங்களை
அடித்துப் போட்டு விட்டு
அப்படியே
என்னை
கீழே சாய்த்துப் போட்டு
விட்டார்கள்
என்றாலும் ஏணி
இறந்து போகாமல்
பாதுகாக்க
ஒரு
மஞ்சள் அவயம்
கிடைத்தது
அதனை நான்
அத்தனை இறந்த
பலகைகள் நடுவிலும்
என்னை உயர்த்துவதற்காக
இறுக்கிச் கட்டிக்
கொண்டேன்
வாழ்வின்
சொர்க்கத்தை தேடிய படிக்கு

- வாசுகி குணரத்தினம் -



# கனவுகளைப் பிரசவிப்பேன்

எனது சந்தோசங்கள்
எனக்குள்ளிருந்து
வெளிப்படுவதை
யாரும் அறியப் போவதில்லை
நான் சந்தோஷமாக
வாழப்பிறந்தவள்
என்பதும்
சமூகத்தைக் கட்டியாளப்
பிறந்தவள் என்பதும்
எனது வீட்டாருக்கு
புரியப்போவதில்லை
ஆனாலும்
நானும் தொடர்ந்து
போராடுகிறேன்
வாழ்கையை சந்தோஷமாக்கி
இன்புற்று
இனிய கனவுகளை
பிரசவிக்க வேண்டும்
என்று
எண்ணி போது
பொழுதும்
விடிந்து விட்டது
எனது ஆசைகளை
விருப்பங்களை
சிந்தனைகளை
யாரும் புரிந்து
கொள்ளும் வரைக்கும்
நான் இனிய கனவுகளை
பிரசவித்துக் கொண்டிருப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஆறாயிரம்

**சா**ரதாதேவி ஆகிய என்னுடைய கணவர் தட்சணாமூர்த்தி கடந்த வன்செயல், யுத்த காலத்தில் 22.07.1992 இல் இனம் தெரியாதோரால் சொந்த ஊரிலேயே சுட்டுக் கொலை செய்யப்பட்டார். எனக்கு நான்கு பிள்ளைகள் (மூன்று ஆண் ஒரு பெண்)

பின்னர் எனக்கு இலங்கை அரசாங்கம் உயிரிழப்பு நிதி ரூபா ஐம்பதாயிரம்(50,000) வழங்கினார்கள். அப் பணத்தில் ரூபா 25 ஆயிரம் ரூபாய் எனக்கும் மீதி 25 ஆயிரம் ரூபாவை எனது பிள்ளைகள் நான்கு பேருக்கும் சரிசமனாக பிரித்து ஒருவருக்கு தலா ரூபாய் 6200 படி தேசிய சேமிப்பு வங்கியில் (NSB) வைப்பில் இட்டார்கள்.

அப் பணத்தின் மாதாந்த வட்டிப் பணத்தை தாய் பெற்றுக் கொள்ளலாம் என மக்கள் வங்கிக்கு அனுமதி வழங்கி எனக்கு மக்கள் வங்கி புத்தகமும் வழங்கினார்கள். நானும் 1995 இல் இருந்து வட்டியும் பெற்று வந்தேன்.

அதன் பின் எனது மகன் நவநீதன் 9ம் ஆண்டு படிக்கும்போது 15 வயதில் காணாமல் ஆக்கப்பட்டார். இதனால் ஏனைய பிள்ளைகள் மூவரும் 18 வயது நிரம்பியபின் தேசிய சேமிப்பு வங்கியில் இருந்த வைப்புப் பணத்தை மீளப் பெற்று விட்டார்கள்.

காணாமல் ஆக்கப்பட்ட மகனுக்குரிய பணம் தேசிய சேமிப்பு வங்கியில் அப்படியே இருந்தது. காலமும் போய்க் கொண்டே இருந்தது. நானும் எனது மகனை தேடும் பணியில் ஈடுபட்டு வந்தேன். இதனால் ஆணைக் குழுவிடம் நேர்முக அறிக்கை கொடுத்து வந்தேன்.

நான் ஒரு தடவை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளரிடம் காசு பெறுவது எப்படி என்று விசாரித்தேன். அவர் கூறினார், உரிய ஆள் இல்லாட்டி அவருடைய மரணப் பத்திரம் இருந்தால் மட்டுமே காசைப் பெற முடியும் என்றார். இது நடந்தது 2010ம் ஆண்டு.

தற்போது எனக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் (OMP) மூலம் காணாமல் ஆக்கப்பட்டவருக்கான தற்காலிக (இறப்பு) சான்றிதழ் கிடைத்துள்ளது.

நான்கு பிள்ளைகளின் பெயரில் காசு வைப்பிலிடப்பட்டதற்கு ஆதாரமாய் ஒரு சான்றிதழ் பிரதேச செயலகத்தில் இருந்து எனக்கு தரப்பட்டிருந்தது. அது அப்போது என்னிடம் இருந்தது. அதை தவறுதலாக தொலைத்து விட்டேன். ஆகவே தற்போது என்னிடம் இருக்கும் ஒரே ஆவணம் மக்கள் வங்கியில் வட்டி பெற்று வந்த கணக்கு புத்தகம் மட்டுமே.

14.03.2024 (வியாழன்) அன்று அந்த வங்கிப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு மக்கள் வங்கி முகாமையாளரிடம் சென்று நடந்தவற்றை கூறி பணத்தை பெற என்ன வழி என்று கேட்டேன். அவர் ஒரு பெண் முகாமையாளர். அவர் எனது கணக்கு இலக்கத்தை கணனியில் செக் பண்ணிவிட்டு "நீங்க NSB வங்கிக்கு போங்க. போக முதல் பிரதேச செயலகத்தில் (DS office) இருந்து கடிதம் எடுத்து போங்க" என்றார்.

20.03 2024 (புதன்) செங்கலடியில் உள்ள பிரதேச செயலகத்தின் புனர்வாழ்வு பிரிவு பெண் உத்தியோகத்தரிடம் எனது சம்பவத்தை கூறினேன். அவர் என்னை இன்னுமொரு பெண் உத்தியோகத்தரிடம் அழைத்துச் சென்றார். அந்த பிள்ளை எனது காணாமல் ஆக்கப்பட்ட மகனின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை கேட்டார். அதனைக் கொடுத்தேன். அதை வைத்துக் கொண்டு ஒரு பெரிய சியார் (C.R) கொப்பியில் பெயரைத் தேடினார். நானும் பக்கத்தில் நின்று பார்த்ததால் எனது மகனின் பெயரைக் காட்டினேன். "இந்தா

இருக்கு பிள்ள" "ஆ சரி அக்கா. வாங்க உதவி ஏடிஎஸ் (ADS) இடம் போவம் என்று கூட்டிச் சென்று எனது மகனின் சம்பவத்தைக் கூறினார். ADS பெண் சொன்னா, பிரச்சனை இல்லை GSஐ (கிராம சேவகரை) வைத்து நாம இந்த காச அம்மாவுக்கு கொடுக்கலாம் என்று. சரி என்று அந்த பிள்ள என்னை கூட்டி வந்து "அக்கா உங்களிட்ட ஒரு ஆவணமும் இல்லாததால் நீங்க,

1. ஆவணம் தொலைந்து விட்டது என்று கடிதம் எழுதனும். GS அத உறுதிப்படுத்தனும்.
2. நீங்க அம்மா அந்த பணத்தைப் பெற ஒரு கடிதம் எழுதனும். GS அத உறுதிப்படுத்தனும்
3. உங்கட காணாமல் ஆக்கப்பட்ட மகனுடைய பிறப்பு அத்தாட்சி பத்திரம்.
4. காணாமல் ஆக்கப்பட்ட (மரண) சான்றிதழ்
5. உங்கட பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
6. உங்கட தேசிய அடையாள அட்டை பிரதி.

இவ்வளவு ஆவணமும் கொண்டு வாங்க" (24.03.2024) 21.03.2024 - வியாழன். அன்று GS இடம் சைன் வாங்கினன். 25.03.2024 - திங்கள் பிரதேச செயலகம் (DS office) சென்று அப் பிள்ளை கேட்ட ஆறு ஆவணங்களையும் கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்டபின் என்னை இருக்கச் சொல்லி விட்டு ஒரு லெட்டரை டைப் செய்து அதனை ADS இடம் கொடுத்து சைன் வாங்கி எனக்கு தந்தார். "இத NSB க்கு கொண்டு போங்க அக்கா அவங்க என்னென்ன கேட்பாங்க என்று தெரியாது, என்று சொன்னார்.

உடனே லெட்டரை கொண்டு NSB செங்கலடிக்கு போனேன். அங்கிருந்த 2 பெண் உத்தியோகத்தர் கூறினார்கள், இது மட்டக்களப்பு NSB க்கு உரியது அங்க போங்க என்று.

(26.03.2024 செவ்வாய்) மட்டக்களப்பு NSB முகாமையாளர் (பெண்) நான் ஏற்கனவே அவரை சந்தித்து எனது பிரச்சனையை கூறியபோது, நீங்க செங்கலடி NSB யில் எடுக்கலாம் என்று கணக்கு இலக்கமும் தந்து அனுப்பியவர், என்னை கண்டதும் "வாங்கம்மா உங்களை இங்கே அனுப்பி விட்டாங்களா" என்று கேட்டு DS ஒப்பிஸ் லெட்டரை வாங்கி படித்து விட்டு என்னை இன்னொரு பெண் உத்தியோகத்தரிடம் கொண்டு போய் விட்டுத்து "இவட இந்த காசுக்குரிய வேலய பாருங்க என்று கூறினார்."

அந்த உத்தியோகஸ்தர், 'நான் தார இவ்வளவு விண்ணப்ப படிவங்களையும் நிரப்பி வாங்க' என்று தந்தார்.

1. NSB முகாமையாளருக்கு பணம் கோரிய விண்ணப்ப கடிதம்
2. NSB படிவம் நான் மட்டும் சைன் பண்ணியது
3. 50 ரூபா முத்திரை ஒட்டி JB சைன் பண்ணி ஒரு படிவம்.
4. GS சைன் பண்ணி ஒரு படிவம்.
5. பிள்ளைகளின் பெயர் எழுதி, சம்மத கையெழுத்தும் வைத்து அதை GS சைன் பண்ணி ஒரு காணாமல் ஆக்கப்பட்ட மகனின் பிறப்பு சான்றிதழ்
6. காணாமல் ஆக்கப்பட்ட மகனின் காணாமல் போன சான்றிதழ்
7. இருக்கும் பிள்ளைகள் மூவரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் 3
8. இருக்கும் பிள்ளைகள் மூவரின் தேசிய அடையாள அட்டை பிரதி 3
9. என்னுடைய பிறப்பு சான்றிதழ் 1
10. தந்தையின் மரண அத்தாட்சிப் பத்திரம் 1
11. DS ஒப்பிஸ் லெட்டர்

மேற் கூறப்பட்ட இவ்வளவு ஆவணங்களையும் உரியவர்களிடம் சைன் வாங்கி 01.04.2024 அன்று NSB சென்று அந்த பெண் உத்தியோகத்தரிடம் கொடுத்தேன். அவர் வாங்கி பார்த்துவிட்டு இவ்வளவும் மனேஜரிடம் கொடுத்து சைன் வாங்கி வாங்க என்றார். சரி என்று மனேஜரிடம் சென்று ஆவணங்களை கொடுத்தேன். அவர் சரி பார்த்தார். எனது மகள் நவஜோதியின் தேசிய அட்டை பிரதி இல்லை என்றார். நான் 'என்னுடைய

போனில் இருக்கிறது மிஸ் கொஞ்சம் எடுத்து தர முடியுமா?' என்று கேட்டேன்.

ஒரு பிள்ளையை கூப்பிட்டு இத கொஞ்சம் எடுத்து தாங்க என்று கொடுத்தா, அந்த பிள்ளையும் அதை எடுத்து கொடுத்தார். பின்னர் மனேஜர் என்னிடம் கேட்டா, 'உங்களுக்கு கலியாண பதிவு இருக்குதா?' என்று.

நான் சொன்னேன் **'மிஸ் நான் கலியாணம் கட்டும்போது எனக்கு 15 வயது. எனது கணவருக்கு 17 வயது. அதனால் கலியாண பதிவு பண்ணல்ல. பிறகு கலியாண பதிவு வைக்கும் வயது வரும்போது எனது கணவரை சுட்டு கொலை செய்திட்டாங்க'** என்று.

மனேஜரும் இளம் வயது பிள்ளை. சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டு கூறினார், 'அந்த காலத்தில் அப்படித்தானே செய்தாங்க என்ன அம்மா, கலியாண பதிவே வைக்கிறல்ல' என்றார். 'ஓம் மிஸ்' என்றேன்.

பிறகு காசாளர் பிரிவில் உள்ள பிள்ளையிடம் இவட காச பாத்து சூடுங்க என்று கூறினார். அந்த பிள்ள என்னை கூட்டி வந்து இவடத்தில இருங்க நான் கூப்பிடுறன் என்று சொன்னா. இருந்தேன். சிறிது நேரத்தில் கூப்பிட்டு 'இவடத்தில ஒரு சைன் பண்ணுங்க' என்றார். வைத்தேன். பின் எனது கையில் சிலிப் அத்தோடு NSB கணக்கு புத்தக போட்டோ கொப்பியும் தந்து 'இந்தாங்க 2 கிழமைக்குள்ள காசு போடுவாங்க வந்து இத கொடுத்து எடுங்க' என்றார்.

நான் கேட்டேன் 'பிள்ள காசு போட்டா எண்ட போனுக்கு மெசேஜ் வருமா?' என்று. 'இல்ல, நான் ஒரு போன் நம்பர் தாறன் அதுக்கு போண் பண்ணி கேட்டுத்து வாங்க' என்று அந்த அலுவலகப் பிள்ளை சொன்னது.

இன்னும் அந்த ஆறாயிரம் அப்படியே NSB யில் பத்திரமாக உறங்குகின்றது. அதுவும் அப் பணத்தில் ஏதோ வரி கழித்துத்தான் தருவாங்களாம் என்றும் சொன்னா அந்த பிள்ளை. எண்ட மகன் இருந்தால் இப்ப அவனுக்கு வயது 42.

நான் 2013 இல் இருந்து அப் பணத்தில் வட்டி பெறவில்லை. அதை கேட்டதற்கு 'அம்மா அந்த வட்டிக் காசை செங்கலடி மக்கள் வங்கியில் எடுங்க என்றார்கள்'. 'சரி' என்று NSB யில் இருந்து விடை பெற்றேன்.

கணக்குப் பார்த்தேன். இந்த ஆறாயிரம் பெற நான் செலவழித்த (ஆட்டோ, பஸ்) போக்குவரத்து, முத்திரை, போட்டோ கொப்பிகள் எல்லாம் சேர்த்து மூவாயிரம் ரூபாய்க்கும் மேல.

01.04.2024 அன்று NSB bank சென்று எல்லா ஆவணங்களையும் கொடுத்து, அந்த அலுவலர் 2 கிழமைக்கு பிறகு வந்து பாருங்க என்று சொன்னதும் அவ கொடுத்த போண் நம்பரையும் வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்.

பின்னர் 17.04.2024 அன்று 16 நாள் கழித்து போண் பண்ணாமல் நேரே NSB bank க்கு போனேன். கவுண்டரில் நம்பரைக் கொடுத்து காசு வந்திருக்கா என்று கேட்டேன். அவ நம்பரை கம்பியுட்டரில் அடித்து பார்த்து விட்டு இன்னும் வரல்ல என்றா. 'இப்பதானே புத்தகம் போட்டு ஸ்ராட் பண்ணியிருக்கு ஒரு மாதம் ஆகும்' என்றா. நான் சொன்னேன் 'இல்ல குளோஸ் பண்ற' என்றேன். உடனே அந்த அலுவலகருக்கு பின்னால இருந்தவ (அவதான் ஏற்கனவே பைல் வாங்கினவ) 'இது வேற இஞ்ச தாங்க' என்று சிலிப்ப வாங்கி 'இது இன்றைக்கு வரும் நாளைக்கு வந்தெடுங்க' என்றா. 'இவ்வளவு உறுதியா சொல்றாளே' என்று மனதுக்குள்ள நினைச்சித்து போனன்.

திரும்ப 18 வியாழன் போகாம 19.04.2024 அன்று வெள்ளிக்கிழம போனன். கவுண்டரில் இருந்த பிள்ள நான் திரும்ப நிரப்பி கொடுத்த சிலிப்ப வாங்கி நம்பர கம்பியுட்டரில் அடிச்சிப் பாத்திற்று 'காசு வரல்ல அக்கா' என்றா. இன்றுடன் நான் செலவளித்த காசு ரூபாய் 4500.

திரும்ப 25.04.2024 அன்று 6 நாள் கழித்து NSB bank க்கு போனேன். இன்று வஸ் காசு ரூபா 500 ஐ சேர்த்தா மொத்தம் ரூபா 5000 செலவழித்து விட்டேன். அதனால வரப்போற ரூபா 6000 இல்லாட்டியும் பரவாயில்ல இன்றைக்கு மனேஜரிட்ட இது பத்தி கறார

கேட்டுத்தான் ஆகனும் என்று நினைத்தபடி வழமைபோல திரும்ப ஒரு சிலிப் நிரப்பி கவுண்டர் பிள்ளையிடம் கொடுத்தேன்.. அது பாத்திற்று 'காசு வரல்ல' என்றா? நான் சத்தமா 'புள்ள இந்த காசு எங்க இருந்து வரணும் உங்களுக்கு தெரியுமா இந்த 6000 ரூபா எடுக்க இதுவரை 4500 ரூபா செலவளித்து விட்டேன், சொல்லுங்க இந்த காசு எங்க இருந்துதான் வரனும்' என்றேன்.

இதுவரை எனது சத்தம் இப்படி ஒலிக்கவில்லை. சத்தத்தில் எல்லோரும் எங்களைப் பார்த்தனர். இந்த பிள்ள பின்னால இருந்த அலுவலரிட்ட ஏதோ சொன்னா. பக்கத்து கவுண்டரில் இருந்தவரிடம் 'அண்ணன் இத பாருங்க அவ இண்டைக்கு லீவு அவதான் இத குளோஸ் பண்ணனும் அவ வரல்ல' என்றா. (அப் பெண் குறிப்பட்டு சொன்ன அலுவலகப் பெண்தான் என்னிடம் பைல் வாங்கி இன்று காசு வரும் என்று சொன்னவ) அப் பெண் மற்ற அலுவலரிடம் 'நீங்க இந்த பைல் லை குளோஸ் பண்ணலாம்தானே அண்ணா' என்று எனது பைல் ஐ கொடுத்தா.

அந்த அலுவலகப் பெடியன் என்னை நிமிர்ந்து பார்த்து விட்டு 'எங்கருந்தம்மா வாறீங்க' என்றார். 'செங்கலடி' என்றேன். 'அப்ப அந்த அங்க இருக்கிற NSB வங்கியில இந்த வேலய பாத்திருக்கலாமே. 90ம் ஆண்டுதான் எந்த இடத்தில இருக்கிற வங்கியில காசு போட்டாங்களோ அங்க எடுக்கனும். ஆனா இப்ப எங்க இருக்கிற NSB வங்கியிலயும் எடுக்கலாம்' என்றார். 'எந்த வங்கி எண்டாலும் காசு வந்தாத்தானே காசு எடுக்கலாம்...எங்க இருந்து இந்த காசு வரனும்' என்று கேட்டேன். 'கொஞ்சம் அதில இருங்க கூப்பிடுறன்' என்றார்.

ஒரு 15 நிமிசத்துக்கு பிறகு கேட்டேன் 'என்மா இன்றைக்கு அலுவல் முடியுமா' என்று. 'உங்கட பைல் ஐ குளோஸ் பண்றவ இண்றைக்கு லீவு. வேற ஒருவர வைச்சிதான் குளோஸ் பண்றம். நீங்க 5500 ரூபாய்க்கு ஒரு பச்ச சிலிப் நிரப்புங்க என்றா. 'என் 6200 ரூபா காசு தானே' என்றேன். 'அது வரி கழிச்சிருக்கம்' என்றா.

பிறகு போண் பண்ணி 'எங்கண்ணன் இருக்கீங்க வாங்க' என்றா. அந்த அலுவலகர் வந்து பைலை குளோஸ் பண்ணி கொடுத்தார். மற்ற கவுண்டரை காட்டி 'அந்த கவுண்டரில காச எடுங்க' என்று என்னிடம் சொல்லிவிட்டு காசு கவுண்டரில் சிலிப்பை கொடுத்து 'இவைக்கு புத்தகம் இல்ல சிலிப்புக்கு காச குடுங்க' என்றா.

காசு கவுண்டர் பிள்ள என்னிடம் சைன் எடுத்திற்று மற்ற அலுவலரிட்ட 'புத்தகம் இல்லாததால இவட சைன் உண்மையானதுதானா என்று பாக்க ஏலாம இருக்கு' என்றா. பிறகு 5500 ரூபா தந்தாங்க. 'இல்லாத பிள்ளைக்கும் வரி' என்று எனக்குள் முணுமுணுத்தபடி அந்த வங்கிக்கு ஒரு கும்பிடு போட்டுத்து வந்தன்.

ஆனா நான் ஏமாத்தப்பட்டிருக்கன். அந்த வங்கி அலுவலகர்கள் தான் பைல் குளோஸ் பண்ணி காசு போட வேண்டிய பொறுப்பில் உள்ளவர்கள். ஆனா 'காசு வரல்ல..காசு வரல்ல என்று இன்றைக்கு வரும் நாளைக்கு வரும்' என்று என்னை அலைக்ககழிச்சவங்க...

எங்கட உயிரிழந்த காசு அது, அந்த காசுக்கு இவ்வளவு ஏமாற்றமா? எழுத வாசிக்க தெரிந்த எனக்கே இப்படி என்றா ஒன்றும் தெரியாத தாய்மார் நிலை..?

'ஏமாற்றுபவர் இருக்கும் வரை ஏமாறுபவரும் இருப்பர்'
'ஏமாறுபவர் இருக்கும்வரை ஏமாற்றுபவரும் இருப்பர்'

**சாரதா.**
**(உண்மையான அனுபவ கற்கையில்)**
**2024**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நியாய நடை
மட்டக்களப்பு

# நடையின் 365 ஆம் நாள்

இவ் அனுபவத்தின் அகாலம்
நடையை நடையாக்கும் கணங்கள்
கடந்து போன கணங்கள்
எழுதப்படவோ, குறிக்கப்படவோ
மறுக்கும் அந்த கடந்த காலம்
இச் சொற்கள் இக்கணம்.....
உள்ளதைக் குறிப்பவை
இக்கணம் உள்ளது அல்லாமல்,
நடையை உருவாக்கும் கணங்கள் கிடையாது

ஓர் நிலையில் அமைதியாய்
நாம் ஆயத்தத்தில் இருக்க
நடைக் கோட்டில்
நம் இடத்தில் போய் நின்று
மெல்லிய அமைதியான அடிகள்
முடியா எண்ணங்கள் அலைமோத
எண்ணங்களை மீண்டும் நடைக்கு அழைத்துவர
பார்த்து, முழுமையாய் நடையில் இருப்பு.
ஒரு கணம், ஒரு அசைவு, ஒரு இருப்பு
எண்ணங்கள் இல்லா நடை
நாம் நடத்தப்படுகிறோம்.

மெல்லிய தாளம்
கடந்து செல்வோரின் கண்கள்
எம் கண்களை சந்திக்க.....
வார்த்தையற்ற தொடர்பு எம்மிடையே
ஓர் உயிர் ஓர் இருப்பாய்
நாம்......
கோவம், எரிச்சல், விரக்தி

நாட்டில் ஏதோதோ விடயங்கள் நடக்க....
நடை நம்மை அழைக்கிறது
வேகமாய் பாயும் எண்ணங்கள்
குரோதமாய் எழும்பும் உணர்வுகளை
அமைதியாக்க...,
நாம் நம்முடனே, நம் உள்ளிருப்புடன்
தொடர்பு கொள்ள ஒரு அழைப்பு.
ஒரு அமைதியான
வலிமை
உள் பிறக்க.....
பாதிக்கப்பட்டவர் அல்ல
உருவாக்குபவளும்
இப்போதைக்கு அல்ல....
நடுப்பட்ட வெளியில்
திடமற்ற இடம் - ஆனால்
வளமான ஒப்புதல்
அக்கணத்தை ஒப்புக் கொண்டு
மனமார்ந்த செயலுடன்
வாழ்தல்....

நடை நம்மை அழைக்கிறது
அதனை நம்பி வர அழைக்கிறது
இருக்கவிடல்,
இறுக்கி பிடிக்காமல்
விட்டு விடுதல்,
தாளத்தில் அசைவு
என்றென்றும் நமக்குள்ள
ஒரே கணமும்,
அசைவிற்கிணங்க
இது இக் கணம் மட்டும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பொருளாதார நெருக்கடியும் அதன் தாக்கங்களும்

**பொ**ருளாதார நெருக்கடி காரணமாக சமூகத்தில் பல்வே று தாக்கங்கள் ஏற்படுகின்றன. ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் ரீதியான அபிவிருத்தி ஆகும். ஆணும் பெண்ணும் சமத்துவ சிந்தனையுடன் செயற்படும் போது அபிவிருத்தி ஏற்படும். "ஆணும் பெண்ணும் சரி நிகர்" என கொள்வதால் இவ்வையகம் தழைக்கும் எனும் பாரதி வாசகத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன். அதிக அந்நிய செலவாணியை ஈட்டி தரும் துறைகளாக தோட்டத் தொழில், ஆடை தொழிற்சாலை, வெளிநாடுகளுக்கு பணிப் பெண்ணாக செல்வது, சுற்றுலாத்துறை போன்றன முக்கிய துறைகளாக காணப்படுகின்றன. இந்த துறைகளில் அதிக பங்களிப்பு செய்பவர்கள் பெண்கள். எனவே பால்நிலை சமத்துவம் பேணப்பட்டு அபிவிருத்தியை நோக்கி நகர வேண்டும். ஆனால் இங்கு சமத்துவம் பேணப்படுகின்றதா? எனக் கேட்டால் இல்லை என்பது வெளிப்படை உண்மை. ஆணாதிக்க சிந்தனை காரணமாக சம வாய்ப்பு, சம சம்பளம், சம வளங்கள் வழங்கப்படுகின்றதா? என்றால் அதுவும் கேள்விக்குறிதான். இங்கு பாலியல் சுரண்டல்கள், பாலியல் வன்முறைகள் இடம் பெறுவதும் சமூக ஊடகங்களுடாக அறிய முடிகின்றது.

ஆடை தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களை எமது சமூகம் பார்க்கும் பார்வை தவறானது ஆகும். அவர்களை விமர்சிக்கும் போது அவர்கள் மன உழைச்சலுக்கு உள்ளாகின்றனர். வீட்டுப் பிரச்சினையின் பாரம் கடைசியில் பெண்களின் கரங்களை வந்தடையும். எனவே பெண்களை அபிவிருத்தி துறையில் இணைப்பதன் மூலம் நாட்டின் சுமையை குறைக்க முடியும். பெண்களுக்கு பெருஞ்சுமைகள் காணப்படுகிறன. பால்நிலை சமத்துவம் பேணப்பட்டால் ஆண்கள் பெண்களது வீட்டு வேலை, பிள்ளை வளர்ப்பு, சமூக செயற்பாடுகள் போன்றவற்றில் உதவி செய்தால் பெண்களும் உற்பத்தி துறைகளில் ஈடுபட்டு வீட்டுக்கும் நாட்டுக்கும் பொருளாதார ரீதியான பங்களிப்பை வழங்க முடியும்.

எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதன் தீர்வு இறுதியில் பணம் எனும் அளவுக்கு காலம் சென்று கொண்டுள்ளது. பொருளாதார பிரச்சினை எனும் போது அதன் தாக்கங்களாக அல்லது அதன் விளைவுகளாக பாடசாலை இடை விலகல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலை, மன நோயாளிகள், போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், விலைவாசி ஏற்றம் மின்கட்டணம் உயர்வு, விவாகரத்து, தாவரிப்பு வழக்கு, கொலை, வறுமை, வீட்டு வன்முறை என பல்வேறு தாக்கங்கள் இடம்பெறுகின்றன. இதற்கான காரணம் என்ன என்று பார்க்கும்போது பொருளாதார வீழ்ச்சி ஆகும். பொருளாதார வீழ்ச்சிக்குப் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. அந்த காரணங்களை அடையாளம் கண்டு அவற்றை சரி செய்யும் போது பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர முடியும்.

மஞ்சளின் விலை ஒரு காலத்தில் அதிகமாக இருந்தது. உள்நாட்டு உற்பத்திகள் அதிகரிக்கும் போது அதன் விலைவாசியும் குறைவடையும். பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக மக்கள் வரிசையில் நின்றனர். விவசாயத்திற்கு தேவையான உரத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அத்தோடு விலைவாசி அதிகமாக இருந்தது. இதனால் மக்கள் மத்தியில் ஒரு பயம் ஏற்படத் தொடங்கியது. இதனால் வீடு வளவுகளை விற்றுவிட்டு வெளிநாடு செல்ல ஆரம்பித்தனர். வங்கியில் பணம் வைக்க பயம். பயந்த நிலையில் பணத்தை கொடுத்து நகைகள் வாங்குவதும் வீடு வளவு காணிகளை வாங்குவதும் என மூலதனம் முடக்கப்படுகின்றது. "பணம் பாதாளம் வரை பாயும்", "பணமில்லா விட்டால் பிணம்" என்பார்கள் நிதிப் பற்றாக் குறைகளால் விழிப்புணர்வு நிகழ்வுகளும் குறைவடைந்துள்ளதால் பல்வேறு சமூகத் தாக்கங்கள் அதிகரிக்கும். அதனால் மனநோயாளி களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றன. எனவே ஒவ்வொருவரும் தொழில் முயற்சியாளர்களாக மாற வேண்டும். பண்டமாற்று முறைகளை கொண்டுவர முடியும். தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

பெண்களின் முன்னேற்றம் உலக நலனுக்கு முக்கியமானது. ஓர் இறக்கை உடைய பறவையால் பறந்து சாதிக்க முடியாது என்று பெண்ணினத்தின் முக்கியத்துவத்தை அழகாக சுவாமி விவேகானந்தர் கூறினார். பெண்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு செயற்பாடுகள் இடம் பெறும்போது அபிவிருத்தி என்பது சந்தேகம் இல்லை.

வெளிநாட்டு கடன் டொலார் பற்றாக்குறை, பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை, பொருட்களின் விலை அதிகரிப்பு, பண வீக்கம் போன்றன ஏற்பட்டன. அதனால் முரண்பாடு, போட்டித் தன்மை, சண்டை, கொலை, களவு, ஏமாற்றம், தற்கொலை, உள நோய்கள் எனப் பல தாக்கங்கள் இடம்பெறுகின்றன. இதனை குறைக்க வேண்டுமாயின் மாற்று வழிகளை கண்டுபிடிக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். உளநல ஆலோசனைகளை அதிகரிக்க வேண்டும். பல குடும்பங்களின் வருமானம் பாரியளவில் வீழ்ச்சி அடைந்தமை மக்களை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு விட்டுச் சென்றுள்ளது. 2020இல் மார்ச் ஏற்பட்ட இறக்குமதி தடைகள், உலகளாவிய ரீதியிலான பொருட்களின் விலை உயர்வு ஆகியவை பணவீக்க அழுத்தத்துக்கு பங்களிப்பு செய்துள்ளன. வேலையின்மை மனச்சோர்வு, நாட்டின் வாழ்க்கை தரத்தின் கூர்மையான வீழ்ச்சி போன்ற எதிர்மறை நிகழ்வுகள் பொருளாதார நெருக்கடி என்ற கருத்துடன் தொடர்புடையவை.

பொருளாதார சூழ்நிலையில் ஏற்பட்ட கடுமையான மாற்றங்களால் இந்த நெருக்கடிகள் அதிகரிக்கின்றன. அதனால் உலக ரீதியான பாதிப்புகளுக்கும் வழிவகுக்கின்றன. சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், வலு இழப்புடன் கூடிய நபர்கள் அதிகமாக பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும். உணவுத் தட்டுப்பாடு, மருந்துத் தட்டுப்பாடு ஆரோக்கியமற்ற சமூகத்தை உருவாக்கும்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்க குழு அறிக்கையின் படி இலங்கையில் 5 மில்லியன் மக்கள் மனிதாபிமான உதவி தேவைப்படுபவர்கள் என்கின்றது. மொத்த சனத்தொகையில் 26 சதவீதப் பேர் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப் பட்டுள்ளனர். 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போசாக்கு குறைவடைந்துள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நாட்டின் மொத்த சனத்தொகையில் 11 சதவீதமானவர்கள் வருமானத்தை இழந்துள்ளனர். குடும்பத்தின் வருமானம் மட்டும் 62% ஆல் குறைவடைந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியானது குடும்பங்களை வறுமைக்கு தள்ளியுள்ளது. தொற்று


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நோய் காரணமாக இந்த நாட்டில் உள்ள அரை மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் தள்ளப்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பீடு செய்துவிட்டது. 86 வீதமான குடும்பங்கள் விலை குறைவான மற்றும் போசாக்கு இல்லாத உணவு வகைகளை கொள்வனவு செய்வதாக உலக உணவு திட்டத்தின் தரவுகள் குறிப்பிடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் உணவு வேளைகளை முழுமையாக தவிர்க்கும் குடும்பங்களும் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோய் பரவலுக்கு முன்னர் இலங்கை முழுவதும் போசாக்கின்மை விகிதாசாரம் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. இந்த நிலையில் தற்போது காணப்படுகின்ற பொருளாதார நிலைக்கு மத்தியில் அது மேலும் வலுவடைந்துள்ளது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று கொண்டதன் பின்னர் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியன எமக்கு உதவிகளை வழங்கும் போது மனித உரிமை நிலைமை குறித்து அவதானம் செலுத்த வாய்புள்ளதாக கருத்துக்கள் நிலவுகின்றன.


இலங்கையில் உள்ள 15 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் 214,298 பெண்கள் தொழிலற்றவர்களாக இருக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக குடும்ப வன்முறைகள் அதிகரிக்கின்றன. 2005 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்பு சட்டம் மூலம் நிவாரணம் பெற முடியும்.

எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து பெண்தலைமைத்துவ குடும்ப பெண்களை பெண்தொழில் முயற்சியாளர்களாக மாற்ற வேண்டும். அவர்களது பிரச்சினைகளை கேட்பதன் மூலம் தீர்வுகளுக்கான வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.

எனவே பொருளாதார நெருக்கடிகளை குறைத்து சம உரிமையுடனும் சமூக, பொருளாதார, அரசியல், சூழல் மற்றும் பால்நிலை சமத்துவத்தை கொண்ட சமூகத்தை உருவாக்க வேண்டும். பெண்கள் விழிப்புணர்வு பெற்று அணிதிரண்டு வலுப்பெறுவதுடன் வலையமைப்புக்களை கட்டி அமைத்து தமது பால்நிலை சமத்துவத்துடனான உரிமைகளை பெறுவதனூடாக சமூக, பொருளாதார, அரசியல் சூழலை சகலரும் அனுபவித்தலை உறுதி செய்தல் வேண்டும்.

**ஜெனிதா மோகன்**
பிரதேச செயலகம், கல்முனை.



# கொடி

உதிரத்தில் குளித்து
உலகிற்கு வந்தவுடன்
அறுத்தெறிந்தான் தொப்புள் கொடியை
இன்று உலகத்தையே
ஆண்டு கொண்டு இருக்கிறது கட்சி கொடி
கடவுளுக்கு கலர் கலராக கொடி
மனித இனத்தை வேறுபடுத்த ஒரு கொடி
உணர்வே இல்லாத கொடிக்காக உயிர்
இழந்தவர்கள் கோடி
உயிர் தந்த தாயின் தொப்புள் கொடியே
பிறந்தவுடன் பிரிந்து விடும்
உயிரற்ற கொடிக்கு எதற்கடா உணர்ச்சி
அறுத்தெறி உன் ஆதிக்க கொடியை
முட்டாள் மனிதனே
கொடியை தூக்கி அலையாதே
மடிந்தால் மண்ணில் தான்
புதைப்பார்கள்
மாளிகையில் அல்ல

**தேவகுமார் நிலுக்சி**
றைகம் தோட்டம், களுத்துறை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "பெண்" சஞ்சிகை



**பொருளாதார நெருக்கடியும் பெண்களும்.**

இதனை நியந்தினி கதிர்காமர் எழுதியுள்ளார். இதன் கருப்பொருள் ஒரு நாட்டின் பொருளாதார நிலை எவ்வாறு பெண்ணைப் பாதிக்கின்றது என்பதனையும் பெண்களின் உழைப்பை எவ்வாறு சுரண்டுகின்றார்கள் என்பது பற்றித் தெளிவாகக் கூறப்படுகின்றது. அத்துடன் பொருளாதார மீட்சியும் சர்வதேச நாணய நிதியம் பற்றியும் பெண்கள் மறைமுகமாக எவ்வாறு தொடர்புபடுகிறார்கள் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றார்.

**- R. பிரியா**

**கடந்து வந்த காலத்தைப் பார்த்தல்.**

இது பெண்ணிலைவாதியும் ஓவியருமான கமலா வாசுகியின் ஒரு காண்பியக் காட்சி ஆகும். இது நாம் இலங்கையில் கடந்த காலத்தில் எதிர்கொண்ட சகல சவால்கள், பிரச்சினைகள் என்பவற்றையும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் ஓவியங்கள் மூலமும் காட்சிப் பொருட்கள் மூலமும்.அறியத்தருவதாகவும் இருக்கிறது.

**- விருத்தி**

**பர்தா**

மாஜிதா என்பவரால் எழுதப்பட்ட ஒரு நாவல் ஆகும். இதில் ஒரு பெண்ணின் உணர்வுகள் மதம் என்னும் போர்வையில் மூடப்பட்டுள்ளது என்பதையும் பெண்களுக்கு அரசியல் வரலாறு, சுதந்திரம், தனித்துவம், ஆளுமை எனப் பல விடயங்கள் தேவை என்பதனையும் வெளிக்கொண்டு வரும் வகையில் எழுதப்பட்டதாகக் காணப்படுகிறது.

**- விஜயசாலினி**

**பாலியல்தொழிலாழி**

அந்தியூர் ராஜினி என்பவரால் எழுதப்பட்டதாக உள்ளது. இதில் அந்தப் பெண் தொழிலை தெரிவுசெய்தது சரியானதாக காணப்படுகிறது. ஒரு கணவனை இழந்த பெண் எவ்வாறான பிரச்சினையை எதிர்கொள்கின்றாள் என்பதைக் கூறுவதாகவும் உள்ளது. இதன் கருப்பொருளை வைத்து ஒரு படம் எடுக்க வேண்டும் எனும் ஆசை தோன்றியுள்ளது.

**- தமிழினி ராஜேஸ்**

**துணையான் (துணையாள்)**

குறும்பட விமர்சனமாகக் காணப்படுகிறது. இதன் தயாரிப்பாளர் தமிழினி சித்திரவடிவேல் அவரும் கலாசாரகுழு உறுப்பினராக காணப்படுகிறார். இதில் ஒரு மாற்றுத்திறனாளி எவ்வாறு வாழ்கையில் முன்னேறுகிறார் என்பதை ஒரு படத்தின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளனர்.

**- மிருகாஞ்ஜினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊருக்குத்தான் உபதேசம்.**

ஒரு மாற்றுத்திறனாளி எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள் என்பதனை ஒரு மோட்டார் வாகனத்திற்கு லைசன்ஸ் எடுக்க முயலும் போது ஏற்படும் அலைக்கழிவும் அதன் பின் பொறுத்தமற்ற லைசன் கொடுத்து ஏமாற்றப்படுவதையும் விபரிக்கிறது.

**- தரணியா**

**மலையகத்தின் இன்றைய நிலையும் கடந்தகால சவால்களும்**

எவ்வாறு மலையக மக்கள் இலங்கைக்கு வந்தார்கள் என்பதனையும் அவர்கள் அன்றில் இருந்து இன்று வரை எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அத்துடன் பிள்ளைகளின் திறமை, கல்வி எவ்வாறு அழிகிறது எனவும் கூறுகிறது.

**- சாலி**

**இழந்த காலங்கள் இனி வரப்போவதில்லை**

மாற்றுத்திறனாளிகள் (ஊனமுற்றோர்) மருத்துவப் பிரிவில் அவர்களுக்கு எவ்வாறான தேவை இருக்கிறது. அவர்கள் அதனால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றார்கள் எனவும் கவிதை வடிவில் பிறேமா எழுதியுள்ளார்.

**- பிருந்தா**

இப் பெண் புத்தகம் ஒரு விழிப்புணர்வுப் புத்தகமாக இருப்பதுடன் பல பிரச்சினைகளை சமூகத்தின் மத்தியில் கொண்டு வந்து சமூகத்தை சிந்திக்க வைப்பதாகவும் அமைகிறது.

நன்றி

- சூரியா கலாசார குழுவினர்



# மனித இனம்



இனம் என்னும் வேற்றுமையால்
போருக்குச் சென்றார்கள்
ஒவ்வொரு மனிதரும்
போருக்குச் செல்ல முன்
யாருமே சிந்தித்துப் பார்க்கவில்லை
நாம் எல்லாம் மனிதன் என்ற
ஓர் இனம் என்பதனை

எவ் இனம் என்றாலும்
உயிர் உணர்வு ஒன்றென்று
உணர்ந்திருந்தால் பல உயிர்கள்
மாய்ந்திராது மண்மீது அப்போது

மனிதன் எனும் ஓரினம்
இருந்திருந்தால் அன்று இன
போரும் இருந்திராது இன்று
பல கேள்விகளும் இனம்பற்றி
எழுந்திராது எம்மிடத்தில்

**பி.பிறிதிகா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குடாவெளி

**செ**ங்கலடி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதுளை வீதியில் அமைந்துள்ள இடம் பன்குடாவெளி. புலையவெளி, தளவாய் சின்ன கொலனி பெரியகொலனி ஆகிய சிறு பிரிவுகளைக் கொண்ட கிராமமாக பன்குடாவெளி உள்ளது. இங்கு மொத்தமாக ஆண்கள் 1038 பேர் பெண்கள் 1058 பேரைக் கொண்ட சனத் தொகையுடன் உள்ளது, இங்கு 675 குடும்பம் காணப்படுகிறது.

இங்கு வசிக்கும் மக்கள் அனைவரும் தமிழ் பேசுபவர்கள். அதில் இந்துக்கள் 2011 பேரும் கத்தோலிக்கர் 22 பேரும் கத்தோலிக்கம் அல்லாதவர்கள் 60 பேரும் உள்ளனர். ஊருக்கு ஆதாரமாகவும் பழமை வாய்ந்ததாகவும் இரண்டு ஆலயங்கள் உள்ளன. அவை பிள்ளையார் கோயிலும் மாரியம்மன் கோயிலும் ஆகும். சிறு கோவில் வழிபாடு மரத்தடி வழிபாடு என்ற அடிப்படையில் மூன்று கோயில்களும் ஊருக்குள் உள்ளன.

இதனைத் தாண்டி ஊருக்கு வெளியில் அரசடி அற்புத விநாயகர் ஆலயம் ஒன்றும் உள்ளது. மேலும் சாதாரண கற்கை வசதியுடன் கூடிய ஒரு பாடசாலை மற்றும் தபால் கந்தோர் அமையப் பெற்றும் உள்ளன. மேலும் இவ்வாறாக அமைந்த ஆலயங்களுக்கு என பணி புரியும் வகையில் ஆலயத்திற்கு அருகில் வேறு ஊரில் இருந்து கொண்டுவரப்பட்ட குடும்பம் காணப்படுகிறது. அவர்கள் தட்டாடியார் என அழைக்கப்படுகிறார்கள்.

**சேரும் நிலமும் செழிக்க இருந்தாலும்**
**செருக்கும் சிறுமையும் சேர்ந்தே**
**உள்ளது மக்கள் உள்ளங்களில்**
**நிலை மாறும் நிலையிலும் மாறாத**
**வண்ணமாய் சாதி என்பது மக்கள் மனதில்.**

- தொல்பொருள் காணி சார்ந்த இட ஆக்கிரமிப்பு.
- பன்குடாவெளி மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியானாறு பொலீஸ் பிரிவில் அல்லது செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பகுதியாகவும், மேலும் இது செங்கலடி மஹோயா வீதியை அன்மித்துள்ள பகுதி ஆகும். இதனை கவுரடி என்று கூறுவார்கள்.

இந்தப் பகுதியானது தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்குரிய இடமாக இனம் காணப்பட்ட பகுதியாக உள்ளது. இங்கு காணப்பட்ட தொல் பொருட்கள் புராதன மடாலய வளாகத்தின் இடிபாடுகள் அதாவது கிறிஸ்துவுக்கு முன் 137 தொடக்கம் 119 வரையயான காலத்தில் சத்தாதிஸ்ஸ மன்னனின் ஆட்சியில் அமைந்த அராமிக் வளாகத்தின் இடிபாடாக நம்பப்படுகிறது.

மேலும் இது ஒரு ஸ்தூபியாக காணப்பட்ட போது பூமியின் மேட்டை ஒத்திருந்ததாகவும் இங்கு தூண்கள், தூண் தளங்கள், ஸ்ரீ பதுல் கற்கள் அதாவது கல் அடுக்குகளில் செதுக்கப்பட்ட புத்தரின் கால் பாதங்கள், பாறை அடுக்குகள், நிலா கற்கள், கதவு, சட்டங்கள் மற்றும் பழங்கால செங்கற்கள் உள்ளிட்ட பெரிய அளவிலான கல் இடிப்பாடுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்பட்ட இடம் 2008 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் உள்ள விஹாராவின் அம்பிட்டிய சுமனாரத்ன தேரர், கிழக்கில் உள்ள தொல்பொருள் தலங்கள் வேண்டுமென்றே அழிக்கப்படுவதாகக் கூறி அவற்றை பாதுகாக்கும் நோக்கில் ஒரு தனி அறப்போராட்டத்தை முன்னெடுத்தார்.

அந்தக் காலப்பகுதியில் கௌரடி எனப்படும் அதாவது அரபிக் வளையத்தின் இடிபாடு என கூறப்படும் இந்தப் பகுதியானது தொல்பொருள் சாலை என இனம் காணப்பட்டது. அதன் பின் இந்தப் பகுதி பன்குடாவெளி ரஜகம விகாரை தொல்பொருள் நிலையம் எனப் பெயர் காட்டப்பட்டுள்ளது.


அதே சமயத்தில் 1600 தொடக்கம் 1800 வகையான 14ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் தற்போது விகாரை இருந்ததாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள உள்ள இந்த இடம் கௌரடி என்னும் பெயருடன் முஸ்லிம் இனத்தவர்களின் ஒரு வழிபாட்டு மற்றும் வைத்திய நம்பிக்கைக்குரிய இடமாகவும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த இடம் வழிப்போக்கர்களின் ஓய்வுக்குரிய இடமாகவும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது இதனை தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு இயக்கப் பிரச்சினையின் போது இடப்பெயர்வு நேரத்தில் இந்த கௌரடி இல்லாமல் போனதாக ஊர் மக்கள் கூறுகின்றனர்.

மேலும் இப்போது கூட ஊர்மக்கள் இந்த இடத்தை கவுரடி எனும் பெயரில் தான் அடையாளப்படுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**- S.T. ஷாலு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஞ்சு பெண்ணியத்தின் முன்னோடி




**பி**ரெஞ்சுப் புரட்சியிருந்து நாம் நிறைய படிப்பினைகளை பெற முடியும். எனினும், பிரெஞ்சுப்புரட்சி பற்றி பெரும்பான்மை எழுத்துக்கள், வலதுசாரிய சிந்தனை கொண்டவர்களாலேயே எழுதப்படுகின்றமை எம் வரலாற்றுத் துயரம். பிரெஞ்சு பெண்ணியத்தின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படும் ஒலிம்பே டி கௌஜஸ், நீண்ட காலமாக எமது உலகம் மறந்துவிட்டது.

பிரெஞ்சுப்புரட்சியின் போது, வேரூன்றிய ஒரு புரட்சிப் பெண் அவர். இன்னும் நம் பலருக்கு இவரின் வரலாற்று பங்களிப்புக்கள் -குறிப்புக்கள் கிடைக்கவில்லை கவலையான விடயம். பிரெஞ்சுப் புரட்சியின் முக்கிய ஆவணமான பெண்கள் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பிரகடனத்தின் முக்கிய பங்களிப்பாளராக இவர் இருந்துள்ளார்.

ஒலிம்பே டி கௌஜஸ் பெண்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் - கறுப்பின அடிமைத் தனத்தை. ஒழிப்பதற்கு ஆதரவாக ஏராளமான எழுத்துக்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். பெண் விடுதலை பாலின சமத்துவம் பற்றிய பிரச்சினைகள் குறித்து அக்காலங்களியே சிந்தித்தவர் செயற்பட்டவர்.

1748 - மே இல் மொன்டாபனில் பிறந்த ஒலிம்பே டி கௌஜஸ் 1793 நவம்பர் 3 இல் பாரிஸில் கில்லட்டின் மூலம் கொல்லப்பட்டார். ஒலிம்பே டி கௌஜஸ் தொடர்பாக இவ்விபரங்களை அறிந்த போதிலும், எக்காரணத்திற்காக அவர் கொலை செய்யப்பட்டார் என்ற முழு விபரத்தை என்னால் அறியமுடியவில்லை.

புரட்சிகள் - நல்லவர்களையும், வல்லவர்களையும் கூட பலி வாங்கிய வரலாற்றை பிரெஞ்சுப்புரட்சியின் வரலாற்றின் மூலம் நாம் உணரமுடியும். அவரின் வரலாற்றுக் குறிப்புக்களை தேடிய போது அவர் கடைசியாக வாழ்ந்த இடம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் ஒலிம்பே டி கௌஜஸ் வாழ்ந்ததற்கான எந்த அடையாளமும் இன்றி, ஒரு நினைவுக் குறிப்பேடு மட்டும் அங்கு காணப்படுகின்றது. அது மனதிற்கு பெரும் துயரமாக இருந்தது.

**தகவல் - ஜெயந்தி தளையசிங்கம்**



# மடமை

**மு**த்து சிந்திய சிரிப்புடன்
பள்ளி பருவமதில்
பக்குவமாய் அடிவைத்தேன்
பயணத்தைத் தொடர்வதற்காய்
உருவமில்லா உணர்வதற்கு
மதிப்பளித்துக் காதல் கொண்டேன்
மழைத்துளியை வரழைக்கும்
மேகம் என அறியாமல்

**- தர்மி**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நடத்துனர்



ஊரென்ன பேரென்ன தெரியாது
ஏறியவுடன் இடம் எடுத்து தருவான்
பக்கத்தில் வந்திருந்து ஒருவன்
உரசிட்டு இருக்கும் போது
பதறி போயிருக்கும் முகம் பார்த்துக் பேசுவான்

பலாப்பழம் போல கூட்டம்
பக்கத்தில் இருக்கையிலும்
பக்குவம் என்று தன் கடமையினை செய்வான்
பரிகாரம் பார்த்து
சில்லறையையும்தான் கொடுப்பான்
பாரதாளை நீட்டுகையில் சீறியும் பாய்வான்.

பல மணி நேரமானாலும்
இருக்கையில் அமராமல்
படிக்கட்டிலே தொங்குவான்
இடறுற்றான்
பார்க்கின்ற வேளையில்
பண்பாயிருப்பான்
பாரத நேரத்தில்
பௌவியமாய் திரிவான்

குறிப்பிட்ட நீள் சதுரத்துள்
நூறாயிரமடி நடப்பான்
குற்றமில்லா மனதால்
மானமும் காத்திடுவான்

வாலிய வயதானாலும் வயதெல்லை காட்டான்
வடிவான பெட்டையையும் வளமாக பாரான்
கிலு கிலுப்பாய் கிண்டல்களும் பண்ணுவான்
கிறுகி நடக்கையில் ஏறெடுத்தும் பாரான்

இவ்வாறு இருக்கும் சிலரில்
முரடனும் இருப்பார்கள்
மூர்க்கத் தனமாக முனு முனுத்து - சிடு
மூஞ்சிகளும் மாட்டிடும் சில நாள்.

சிறிதா பெரிதா இவை எல்லாம் பாராமல்
சிடு சிடென்று முகமுறித்து திரிவான்
படி கட்டிலே ஏறும் முன்னே எங்கே என்று
பற்றுச் சீட்டைக் கிழிப்பான்
பாவிப் பயல் என நினைத்து
பதட்டத்தோடு நகர்வர்

பரிதாபகரமாகவும் வந்து சேரும்
பக்குவமாகவும் பார்க்க முடியும்
பற்பல கோணமானாலும்
பயணமே நம் வேலை

**- கோபாலகிருஸ்ணன் டினுஜா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடங்கள்

## "வண்ணம்" மாற்றுத் திறணாளி பெண்கள் குழுவினரின் நாடகம்.







சொற்கட்டு இல்லாமல் இசையை இசைத்தபடி மூன்று குழுக்கள் மேடையில் நுழைதல்.

**3 காட்சிகள்**

**காட்சி 1** - (வீடு:- சகோதரங்கள் அடித்து கொண்டு அக்காவிடம் அம்மாவிடம் ஒடுதல்.)

சிறுமி:- **அம்மா பசிக்குதம்மா**

**காட்சி 2** - (குளம் -கரை விளையாட்டு தவறு ஏற்பட்டதும் சிரித்தல்.)

**காட்சி 3** - (இரயில் மேடை முழுவதும் சென்று நிலைக்கு வருதல்.)

மூன்று காட்சிகளும் உறைநிலையில் நின்றதும் பாடல்.

குரல் :-

**தானினம் தானினம் தானானே**
**தானினம் தானினம் தானானே**

நடிகர்கள் அனைவரும் மேடையில் உரிய இடத்திற்கு வரும் வரை
இரண்டு அல்லது மூன்று தடவைகள் இச்சொற்கட்டு தொடர்ச்சியாக பாடப்படும்.)

**முதல் பந்தி பாடல்:-**

**(உடல் அசைவு:- சொடக்கு)**

குரல் -1
குரல் - 2
சின்னம் சிறிய வயதினிலே
மண்வீடு கட்டி நாம் மகிழ்ந்தோம்
வீட்டை விளையாட்டை தாய் தந்தை விட்டு
யுத்த களத்திற்கு நாம் சென்றோம்
யுத்த களத்திற்கு நாம் சென்றோம்

**பிற்பாட்டு:- (ஐந்து நடிகர்கள்)**

சின்னம் சிறிய வயதினிலே
மண்வீடு கட்டி நாம் மகிழ்ந்தோம்
வீட்டை விளையாட்டை தாய் தந்தை விட்டு
யுத்த களத்திற்கு நாம் சென்றோம்
யுத்த களத்திற்கு நாம் சென்றோம்.

**இரண்டாம் பந்தி பாடல்:-**

குரல் -3
குரல் - 4

**உடல் அசைவு:- கை, தொடை**

புத்தகம் தூக்கி செல்லும் வயதினில்
துவக்கினை தூக்கி நாம் எழுந்தோம்
ஏதும் அறியாத பாலக வயதினில்
இன்னல்கள் பல நாம் சுமந்தோம்
இன்னல்கள் பல நாம் சுமந்தோம்

**பிற்பாட்டு:- (ஆறு நடிகர்கள்)**

புத்தகம் தூக்கி செல்லும் வயதில்
துவக்கினை தூக்கி நாம் எழுந்தோம்
ஏதும் அறியாத பாலக வயதினில்
இன்னல்கள் பல நாம் சுமந்தோம்
இன்னல்கள் பல நாம் சுமந்தோம்

**மூன்றாம் பந்தி பாடல்:-**

குரல் 5
குரல் - 6

**உடல் அசைவு:- அமைதி**

கூடி வாழ்ந்த உறவும் இல்லை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூட்டிச் சென்ற உறவும் இல்லை
உடன் நின்ற தோழியர் இழந்தோமே
எம் உண்மை நிலையை யார் அறிவார்
உண்மை நிலையை யார் அறிவார்

**பிற்பாட்டு:- (4 நடிகர்கள்)**
கூடி வாழ்ந்த உறவும் இல்லை
கூட்டிச் சென்ற உறவும் இல்லை
உடன் நின்ற தோழியர் இழந்தோமே
எம் உண்மை நிலையை யார் அறிவார்
உண்மை நிலையை யார் அறிவார்

**நான்காவது பந்தி பாடல்:-**
குரல் -7
குரல் - 8
**உடல் அசைவு:- நெஞ்சில் அடித்தல்**
இழந்த தோழியர் விட்டு சென்ற
உற்றார் உறவினர் ஊருக்குள்ளே
தப்பி பிழைத்து வந்த நமக்கு
ஆறுதல் சொல்ல வார்த்தை இல்லை
ஆறுதல் சொல்ல வார்த்தை இல்லை

**பிற்பாட்டு:- (ஐந்து நடிகர்கள்)**
இழந்த தோழியர் விட்டு சென்ற
உற்றார் உறவினர் ஊருக்குள்ளே
தப்பி பிழைத்து வந்த நமக்கு
ஆறுதல் சொல்ல வார்த்தை இல்லை
ஆறுதல் சொல்ல வார்த்தை இல்லை

**ஐந்தாவது பந்தி பாடல்:-**
குரல் - 8
குரல் - 9
**உடல் அசைவு:- சொடக்கு, கை, தொடை, நெஞ்சு**
படித்து உழைத்து வளரும் காலத்தில்
கால் கை இழந்து நாம் சுறுண்டோம்
நாட்டிற்காய் மண்ணிற்காய் போராடியே
உடலும் உள்ளமும் உடைந்து நின்றோம்.
உடலும் உள்ளமும் உடைந்து நின்றோம்.

**பிற்பாட்டு:- 6 நடிகர்கள்**
படித்து உழைத்து வளரும் காலத்தில்
கால் கை இழந்து நாம் சுறுண்டோம்
நாட்டிற்காய் மண்ணிற்காய் போராடியே
உடலும் உள்ளமும் உடைந்து நின்றோம்.
உடலும் உள்ளமும் உடைந்து நின்றோம்.
குரல் - 3
குரல் - 4

(நடிகர்கள் சிறு சிறு குழுக்களாக பிரிந்து தங்களுக்கான வேலைகளை செய்ய தொடங்குதல். தொடர்ச்சியாக பாடல்கள் படிக்கும் போது தங்களுக்கான வேலைகளை மேற்கொள்ளுதலும். வசனங்கள் சொல்லப்படும் போது வசனம் சொல்லுபவரை தவிர ஏனையவர்கள் சிலையாக இருத்தல்.)

(பாடல்களும் அதனைத் தொடர்ந்து கதைகளும்)
குரல்:- **சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**
பாடல்:-
வறுமையும் துக்கமும் எமைச் சூழ்ந்திடவே
வருத்தமும் பாரமும் எமை அழுத்திடவே
யுத்தம் அனர்த்தம் பெரும் தொற்று நோயென
நலிவடைந்தோமே அழிவடைந்தோமே

குரல்:- **சொற்கட்டு (ஆஆஆஆஆ....)**

கதை சொல்லும் பெண் 1 :- முடத்தி, நொண்டி, குறுடி, செவிடி, வண்ணிக்காரி, மலையடிக்காரி, ஆட்டக்காரி, ஆட்டுக்காரி என பல பெயருண்டு எனக்கு. ரேணுட புருசனுக்கு கால் ஏலா என்டு டொக்கடரிட்ட மெரிக்கலுக்கு சையின் எடுக்க போனவள் அப்ப டொக்கடர் சொன்னாராம் உங்களுக்கு கால் ஏலா என்டா மெரிக்கல் தர ஏலாது ஒரு கால எடுத்து போட்டு வாங்க மெரிக்கல் தாறன் என்டு. அதே போல பக்கத்து வீட்டு மல்லிகா அக்காக்கு கண் தெரியா அவையும் மெரிக்கல் எடுக்க டொக்டரிட்ட போனா அவர் சொன்னாராம் உங்களுக்கு கண் இருக்குதானே ஒரு கண்ண எடுத்தா தான் மெரிக்கல் தருவன் என்டு.. இப்படி பட்ட டொக்டர்மாரிட்ட நாங்க எப்படி மெரிக்கலுக்கு சைன் எடுக்க போற.

குரல்:- **சொற்கட்டு (ஆஆஆஆஆ.)**
பாடல்:-
உற்றார் உறவினர் பழிக்கின்ற போது

உறவுகளின்றி தெருவிலே நின்றோம்
உடல்களைச் சிதைத்து கனவுகள் கலைத்து
பிறந்த நம் மண்ணில் அகதிகளானோம்

குரல்:- **சொற்கட்டு (ஆஆஆஆஆ....)**

கதை சொல்லும் பெண் 2 :- யுத்த களத்தில் இணைந்தேன். என்ட கையையும் இழந்தேன். எனது தோழிகளின் உயிர்களையும் இழந்து பிரிந்தேன். மீண்டும் என்ட குடும்பத்தோட ஒன்று சேர்ந்தன். திருமணம் என்ட வலையிலையும் விழுந்தேன். என்ட ரெட்டை பிள்ளைகளுக்கு மூன்று வயசு இருக்கும் போது ஒரு நாள் இரவு என்ட வீட்ட சுற்றி செல் விழுந்த அதிர்ச்சியால பிள்ளைகளிட காதில ஏற்பட்ட வெடிப்பால கதைக்காமல் போனார்கள். உன்ட பிள்ளையள் ஊமை தானே கதைக்காத பிள்ளையள் என்ட பிள்ளையோட சேர்த்து பிடிச்சா ஊமையா போயிருவாங்க என்டு சொல்லி என்ட பிள்ளையள வெளியில விட்டு கத பூட்டித்தா. ஒன்டும் அறியாத பச்ச மண்ணுகள், நான் வேல விட்டு வரக்குள்ள றோட்டில்ல படுத்து தூங்கித்தாங்க. நான் ஏன் இப்படி செய்த என்டு என்ட தங்கச்சிட்ட கேட்க அவ உடனே 'நீயும் பாவம் செய்த நீ, உன்ட பிள்ளையலும் பாவம் செய்தவங்க அது தான் உங்களுக்கு இந்த நிலமை. இதனால தான் நாங்க உங்கள ஒரு இடமும் எங்களோட கூட்டி போற இல்ல' . கூட இருப்பான் என்டு ஒருவன கட்டினா அவன் சொல்லுறான் நான் இயக்கத்தில பெரிய பதவியில் இருந்த நானாம் எண்டு சொல்லிக் கொடுத்து என்ன கொல்லுவானாம். ஆனா நான் என்ட இரண்டு பிள்ளைகளுக்கும் கலியாணம் கட்டி கொடுத்து ஒரு பிள்ளைய படிக்க வைச்சி கொலசிப்பும் பாஸ் பண்ண வைச்சி என்ட பேரபிள்ளைகளோட இருக்கன். இருந்தும் என்ட கையால இந்த ஒத்த கையால வேலை செய்து தான் நான் வாழுறன்.

குரல்:- **சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**

கதை சொல்லும் பெண் 3:- என்ன நொண்டி மொடத்தி என்டெல்லாம் கூப்பிடுவாங்க. நான் பிறந்தது என்ன பாவமா. அப்படித்தான் ஒரு நாள் கலியான வீட்டுக்கு வந்தவர்கள் அக்காவை பார்த்து 'இது உங்கட தங்கச்சியா கால் மொடமா இந்த நொண்டி உடுப்பு தைப்பாவா...' என்ட மகனுக்கு கோவம் வந்துத்து உடனே அவன் மரியாதையா வீட்ட விட்டு வெளியில போங்க என்டு கோபமா சொன்னான். நான் அதில இருந்து ஒரு நல்லது கெட்டதுக்கும் போறதே இல்ல. இப்படித்தான் என்ட நண்பர்கள் விளையாடுவாங்க 'நானும் வாறன்' எண்டா, 'உனக்கு கால் ஏலாது நீ பார்த்துத்து இரு' என்டு என்னைய சேக்கவே மாட்டாங்க. எனக்கு டான்ஸ் ஆடுற என்டா சரியான விருப்பம் என்னைய யாரும் சேர்ப்பது இல்லை. எனது பிள்ளைகள் மூன்று பேரும் வளர்ந்த பிறகு 'உங்களாள முடியும்' என்று என்னை டான்ஸ் ஆட வைச்சாங்க. நான் இப்ப எல்லாத்திலையும் கலந்து கொள்ளுறன்.

:- **"தன்னானே தன்னானனே**
**தனநன தானானே தானானானே"**

குரல்:- **சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**

**பாடல்:-**
வீதி வீதியாக நாங்களும் நடந்து
எங்கள் பலங்கள் அனைத்தையும் அறிந்தோம்
கூனிக் குறுகி விலகிச் செல்லாமல்
உறுதியாக தடம் பதித்தோமே

குரல்:- **சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**

கதை சொல்லும் பெண் 4 - 'ஐயோ என்ற பரிதாபம் வேண்டாம். நாங்க பிச்சை கேட்டு வரல்ல. அன்டைக்கு ஒருநாள் நாங்க பஸ்ல வரக்குள்ள இடையில வஸ்ச நிப்பாட்ட நான் இறங்கி நிகழ்ச்சி பார்த்தனான். எண்ட பொடியன் வஸ்சுக்குள்ள. நான் ஏறாம வஸ்ச எடுத்துத்தாங்க. நான் அந்த வஸ்சுக்கு பின்னால பிரிஉஷா மாதிரி வஸ்ரேன்டில தொடங்கி சின்ன ஆஸ்பத்திரி மட்டும் ஓடி வந்து தான் பொடியன இறக்கி எடுத்தனான்.

குரல்:- **சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**

கதை சொல்லும் பெண் 5- ஒரு லெட்சம் வேலை

திட்டத்தில எனக்கும் வேலை இருக்காம் என்டு சொல்ல நானும் அடிச்சி புடிச்சி காலையில 6மணிக்கு போய் வரிசையில நின்டா உங்க பெயர் மூன்டாவதா இருக்கு என்டு சொல்ல எனக்கு சந்தோசமோ சந்தோசம். நானும் பியோன பார்த்து பார்த்து கண்ணும் பூத்துப் பொயித்து. ஆனா பியோன் வரவே இல்ல. ஆனா பக்கத்து வீட்டில இருக்கிற கை கால் நல்லா இருக்கிற ஒராளுக்கு காசு கொடுத்து வேலை கிடைச்சித்து. இத கேட்ட எனக்கு வலுனில ஊசியால குத்தி வெடிச்சா கேட்குமே சத்தம் அது போல என்ட மனசு வெடிச்ச சத்தம் எனக்கு மட்டும் தான் கேட்டது'

குரல் - **சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**

கதை சொல்லும் பெண் 6:- இன்னொன்று தெரியுமா மாற்றுதிறனாளி அமைப்பில தலைவரா, செயலாளரா, பொருளாளரா இருந்தன். ஆனால் மாற்றுதிறனாளி கொடுப்பனவுக்கு போம் போட போனன். அவங்க இந்த வருசம் கடசியா போட்ட மெரிக்கல்ல எடுத்து வர சொன்னாங்க ஒரு தரம் எடுத்தன் அதில்ல எழுதியது விளங்கலையாம். திரும்பவும் எடுத்தன் அதுவும் விளங்கலையாம். இரண்டு கையெழுத்தும் ஒரே மாதிரியிருக்காம் நான் என்ன டொக்டரையா இங்க கூட்டித்து வாற? எனக்கு வந்த கோபத்தில போம கிளிப்பன் எண்டன். அதுக்கு பிறகுதான் சைன் பண்ணித் தந்தாங்க.

குரல் :- **சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**

**பாடல்:-**
எங்கள் ஊரில் தோட்டங்கள் செய்து
நஞ்சற்ற உணவினை உண்டு வாழ்வோம்
தொழில் பல கற்று திறன் பல வளர்த்து
மாண்புடன் ஊரில் நாங்கள் வாழ்வோம்

**குரல் :-சொற்கட்டு (ஆஆஆஆஆ....)**

கதை சொல்லும் பெண் 7 -இன்னொரு பகிடி தெரியுமா மாற்றுதிறனாளிகளுக்கு வாழ்வாதாரம் வந்திருக்காம் என்டு ஜிஸ்(கிராம சேவகர்) கோள் பண்ணினாரு. என்டமகள் டிஎஸ் (பிரதேச செயலகம்) ஒப்பிசில்ல தையல் கிளாசுக்கு போனவள். அவளுக்கு தையல் மெசின் வந்திருக்காம் என்டாங்க. பிறகு GS கோள் பண்ணினாரு வரட்டாம் என்டு அங்க போனா மகளுக்கு மெசின் வந்ததால என்ட ஆட்ட வெட்டியாச்சாம் என்டார். பிறகு கோள் பண்ணினார் உங்களுக்கு ஆடு வந்ததால தையல் மெசின வெட்டியாச்சாம் என்டார். இப்ப மதன முத்தாட கத மாதிரி ஆட்டுக்கு தலையும் இல்ல எனக்கு பானையும் இல்லை. இதுக்குத்தான் அடையாள அட்டைய கன காலமா கேட்டு வாறன்.

கதை சொல்லும் பெண் 8 - அது சரி இப்ப ஒரு அடையாள அட்டை மாற்றுதிறனாளிகளுக்கு வந்திருக்குதாம். அது தேர்தலுக்கு வோட்டு போடவாம். அதையா நாங்கள் இவ்வளவு காலமும் கேட்ட? நான் இன்னும் அதை பார்க்கவே இல்லை

**குரல்:- சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**

**பாட்டு:- அனைவரும்**

பெண்கள் குழுவினில் நாங்கள் இணைந்தோம்
துக்கம் கண்ணீர் உணர்வுகள் பகிர்ந்தோம்
அன்பைக் கண்டு ஆறுதல் அடைந்தோம்
புயல் போன்ற வாழ்வில் அமைதியை உணர்ந்தோம்.

**குரல்: - சொற்கட்டு ஆஆஆஆஆ**
(அனைவரும் மீண்டும் மூன்று வரிசையாக மாறுதல்.

**குரல்:- சொற்கட்டு (ஆஆஆஆஆ...)**

(கையில் உள்ள துணியை மடித்து சொற்கள் உள்ள பகுதியை பார்வையாளர்களுக்கு தெரியும்படி பிடித்தல்.)
**பாடல் - ஒருவர் பாடுதல்**
**தந்தனத நாதனத நாதனத நானா - iv**

(தொட்டில் ஆட்டுவது போன்று பாடலுடன் துணியை அசைத்தல்.)
**வேதனையும் துன்பமும் எமக்குண்டு உண்டு**
**தனிமையும் கண்ணீரும் எமக்குண்டு உண்டு**
**யாரிடம் நாம் இதை கூறி விடை பெறுவோமோ**
**நம்பிக்கையானோரை எமக்கருள்வாயோ**
**(தந்தனத...)**

(இருவர் இருவராக கண்களை பார்த்து திரும்பி நிற்றல்...)

**எமக்கான நாடொன்று கிடைக்கோணும் என்று**
**வீரப் பெண்ணாக அன்று நாம் நின்றோம்**
**கை கால் இழந்து வீடு வந்தோமே**
**உறவுகள் எம்மை புறக்கணித்தார்கள்**

(துணிகளை சேர்த்து கட்டுதல்)

**தந்தனத நாதனத நாதனத நானா**
**தனநாத நாதந்த நாதந்த நானா**
**தந்தனத நாதனத நாதனத நானா**
**தனநாத நாதந்த நாதந்த நானா**

(நடுவில் நிற்கும் பெண்ணிடம் அனைவரும் முடிச்சுப்போட்ட துணியை கொடுக்கின்றனர்.)

பாடல் -

**பெண்கள் குழுவாக நாம் ஒன்றினைந்தோம்**
**ஆடியும் பாடியும் சேர்ந்து மகிழ்ந்தோம்**
**நாட்டில் நடக்கின்ற அநீதியை எதிர்க்க**
**எழுந்தோம் நாம் வலுவாக குழுவாக எழுந்தோம்**

(மரம் அசைதல்)

**தந்தனத நாதனத நாதனத நானா**
**தனநாத நாதந்த நாதந்த நானா**
**தந்தனத நாதனத நாதனத நானா**
**தனநாத நாதந்த நாதந்த நானா**

(பின்வரிசை முன்னுக்கு வருதல்)

**ஆணிவேர் அற்ற மரமாக இருந்தோம்**
**ஆல மரமாக தழைத்து நாம் வளர்ந்தோம்**
**அமைதியும் பாசமும் உள்ளவர் நாமே**
**இன்னும் பலரை எம்மோடு இணைப்போம்.**

(துணியை கீழே வைத்து நாடகத்தை முடித்தல்.)

**சபையோர் வணக்கத்துடன்)**
**தந்தனத நாதனத நாதனத நானா**
**தனநாத நாதந்த நாதந்த நானா**
**தந்தனத நாதனத நாதனத நானா**
**தனநாத நாதந்த நாதந்த நானா**

நடிகர்கள் (வண்ணம் பெண்கள் குழு)

- சுதாமதி
- சரஸ்வதி
- நிர்மலா
- தேவகி
- உதயமலர்
- விமலா
- ரூபிகா
- தேனுஜா
- கோசலாதேவி
- மங்கயர்கரசி
- சுமதினி
- லூத்துமேரி
- அற்புதமேரி
- பிறேமா
- விஜயலட்சுமி

பிரதி - வண்ணம்குழு, விஜயலட்சுமி சேகர்,
பொன்னி அரசு, அ.மங்கை

நெறியாள்கை - பேராசிரியை மங்கை அரசு

# ஆகாத மலர்களே!




தாளம் பூவை
பறித்துக் கொண்டிருக்கிறேன்
சிவ பூசைக்காக
அவை நழுவி நழுவிச்
செல்லுது ஆகாதென்று
கடவுள் சொன்னதாக
யார் சொன்னது?
கடவுள் செய்தது நாம் தானே

வா...
வந்துவிடு
உன்னுடன் விலக்கப்பட்ட
எல்லாப் பூவையும்
அழைத்துக் கொண்டு வா
மல்லிகையும் தாமரையும்
சில காலம் ஒய்வெடுக்கட்டும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மூலம்



எமது முன்னைய காலம் என்பது ஆண் ஆதிக்கம் இல்லாத ஒரு சுதந்திரமான அழகான தாய் வழி சமூகமாக காணப்பட்டுள்ளது. எப்போது ஆண் ஆதிக்க சமூகம் தோற்றம் பெற்றதோ அன்றிலிருந்து பெண்களுக்கான சுதந்திரம் இழக்கப்பட்டு அடிமைகளாக மாற்றப்பட்டனர்.

இந்த நிலை மாற்றம் பெறுவதோடு எம்மைப் போன்ற இளம் சமூகத்தினரிடையே ஆரம்ப காலம் தாய்வழி சமூகமாகவே காணப்பட்டது என்பதையும் வெளிப்படுத்த வேண்டும் என்பது எனது இவ் ஓவிய வெளிப்பாடாக உள்ளது.

இதில் கறுப்பு நிறப் பேனையினால் ஆணி வேரோடு பல கிளைகளைத் தாங்கிய பெண் மரத்தினை புள்ளிகள் மூலம் வரைந்து பின்னணியில் தேயிலைச் சாயத்தினைக் கொண்டு வெளிர் மஞ்சள் நிறமாக மண் தன்மையினை கொண்டு வந்துள்ளேன்.

## முகங்கள்



சமூகத்திலுள்ள ஒவ்வொருவருடைய குணங்களும்வித்தியாசமானது அந்த வெவ்வேறுபட்ட குணமுள்ள முகங்களை ஒன்றாக இணைத்து ஒரே சிந்தனையானவர்களாக மாற்றியமைத்து ஒற்றுமையாக வாழச் செய்ய வேண்டும். ஒற்றுமையாக இருந்தால் நாம் எதையும் சாதிக்க முடியும்.

## ஆசை



இவ் ஓவியத்தில் ஒரு வட்டத்தினுள் பெண்ணினுடைய முகம் வரையப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணுடைய பார்வை என்பது வெளியே உள்ள வீட்டை நோக்கியபடியே உள்ளது. அதாவது ஒரு பெண் இளம் வயதில் சுதந்திரமாக நடமாடித் திரிந்தாலும் திருமணத்திற்குப் பின் அவளுடைய செயல்கள் அனைத்தும் மாறி விடுகின்றன. தனக்கு என்ன ஆசை இருந்தாலும் அவற்றை வெளிப்படுத்தாமல் குடும்பம் குழந்தை தனது வீட்டுச் சூழல் என ஒரு குறிப்பிட்ட வட்டத்தினுள்ளே அனேக பெண்களுடைய வாழ்க்கை அடங்கி விடுகின்றது. அந்த நிலை மாற வேண்டும். எப்போதும் பெண் தனக்காகவும் வாழ முன்வர வேண்டும் என்பதே எனது ஆசையும், அவளது ஆசையும்.

## தைரியம்



ஏதோ ஓர் வகையில் ஒவ்வொரு பெண்ணும் தைரியமானவர்களாகவே வாழ்கின்றனர். அவ்வாறான பெண்களை சமூகத்தில் அடையாளம் கண்டு வெளிப்படுத்தும் நோக்கில் எமது ஊரில் உள்ள கனகம்மா என்பவரை இப் படைப்பில் கொண்டு வந்துள்ளேன். இவர் இந்த வயதிலும் பிரம்பினால் ஆன பொருட்களைச் செய்து விற்பனை செய்தும், வீட்டுத் தோட்டம் செய்தும் , தையல் தொழில் செய்தும் மற்றும் மூங்கில் விற்பனை செய்தும் வாழ்ந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனவு

நாம் ஒவ்வொருவரும் காணும் கனவு அழகானது அந்தக் கனவை நிறைவேற்றுவதற்கு பல முயற்சிகளை எடுப்போம். அதே சமயம் அதனைத் தடுப்பதற்கும் பல வழிகளிலும் நபர்கள் இருப்பாரகள். அந்த அத்தனை தடைகளையும் தாண்டி ஜெயிப்பது என்பது பெரிய விடயம். இதில் அகரலிக், கறுப்புப் பென் என்பன பயன்படுத்தப் பட்டுள்ளன.

**ஓவியை - ரேகா**



## ஏக்கம்

"எமது பிள்ளைகள் நாங்கள் அனுபவிக்கும் வலி, வேதனைகளை அனுபவிக்கக் கூடாது. நல்லதோர் பிரஜையாகவும், நாளைய தலைவராகவும் அவர்கள் வரவேண்டும் என்பதே எங்களின் ஏக்கம்" ஹட்டன் பிரதேசத்துப் பெண்களுடன் கலந்துரையாடிய சந்தர்ப்பத்தில், அவர்கள் தங்களிடம் காணப்படும் அச்சம் ஏக்கம் பற்றிய பயத்தை வெளிப்படுத்திய சந்தர்ப்பம்.



## உரிமை

"தேசிய அடையாள அட்டையில் இந்திய தமிழர் என்றே காணப்படுகின்றது. இலங்கை தமிழர் என்ற நமக்கான உரிமை மறுக்கப்பட்டது. "நமக்கான உரிமை வேண்டும்" - நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன் பிரதேசத்தில், பெண்கள் சார்ந்த கலந்துரையாடலில் பெண்கள் குறிப்பிட்ட விடயம்.



## கனவு

மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும், புத்தளத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நம்ஸியா 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்டதால் தனது பாடசாலையில் கரப்பந்தாட்ட தலைவியாக இருந்து சம்பியன் ஆக வேண்டிய தனது கனவு உடைக்கப்பட்ட தருணத்தை துயரத்தோடு வெளிப்படுத்திய தருணம்.



## வலி

ஒவ்வொரு தலைமைத்துவ பெண்களும் ஏதோ ஒரு வலியை அனுபவித்து தான் அதனை உடைத்து தங்களுக்கான வாழ்க்கையை வாழ்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாதை

பல்வேறு பிரச்சினைகளுக்கு நாளாந்தம் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் பல பெண்களுக்கு வாழ்தலுக்கான பாதையை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தலைமைத்துவ பெண் செயற்பாட்டாளர். புத்தளம் மாவட்டத்தில் பலாவி பிரதேசத்தில் பெண்களுக்காக குரல் கொடுக்கும் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் தலைவி - ஜூவேரியா, முற்கம்பிகளை ஆடையாக அணிந்தது போல பிரச்சினைகளை நித்தமும் எதிர்கொள்ளும் பெண்.

**ஓவியை - சகானா**



கிழக்கின் கரையோர கிராமமாகிய திருக்கோயிலின் சமூகப் பின்னணியில் வளர்க்கப்பட்ட என்னுள் நிலம், சமூகக் கட்டமைப்பு, ஒரு மனித உயிருக்கான அடையாளம் என்பன எதன் அடிப்படையில் வழங்கப்படுகிறது... இவ்வாறான சில கேள்விகளின் வெளிப்பாடே இப் படைப்பு.

**ஓவியை - விதுஷானா**

# தாய்த் தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வமாடிகள்

இலங்கையில் தாய்த்தெய்வவழிபாட்டில் கண்ணகை, காளி, மாரி, பேச்சி, நீலி, காந்தாரி, செண்பகநாச்சி, சுவாதியம்மன் போன்ற தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இத் தெய்வங்களின் வழிபாடு பத்தாசி வழிபாட்டுமுறை மற்றும் ஆகம வழிபாட்டு முறையினைப் பின்பற்றுபவையாகக் காணப்படுகின்றன.

மனித வளர்ச்சிப்படிமுறையில் மனித மீள்உற்பத்தியில் பெண் என்பவள் நிலத்துடன் தொடர்பு கொண்டவளாய்க் கருதப்பட்டாள். அவளின் கருவுறுதல், குழந்தை பிறப்பு என்பது முக்கியமான வளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பெண்ணின் கருப்பையில் ஆவி உறைவதன் மூலம் குழந்தை பிறப்பதும் பின்னர் இறந்த பின் அவ்ஆவி மீண்டும் பெண்ணின் கருப்பையினுள் திரும்புவதாக நம்பினர். பெண்ணின் கருவளையம் என்பது அதீத ஆற்றல் கொண்டதாய் நம்பியதன் அடிப்படையில் தாய்த் தெய்வ வழிபாடுகள் உருவாக்கம் பெற்றன. பெண் புதிய உயிரினை உலகிற்கு தருவதுபோல் நிலமும் பல்கிப் பெருகுகின்றது. நிலம், நீர்நிலைகள் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதால் அவை பெண்ணாய் போற்றப்பட்டன. இவ் ஒப்புவமையில் பூமி, நீர்நிலைகள் தாயாக கணிக்கப்பட்டு தாய்த் தெய்வங்கள் உருவாக்கப் பட்டன

வழிபாடுகளும் தெய்வங்களும் இயற்கையைத் திருப்திப்படுத்தல் ஊடாக நன்மை அடைதல், அல்லது பாதுகாப்பினைப் பெறுதல் என்னும் நோக்கில் இடம்பெற்றன. இவை பாதுகாப்பு, அச்சம், திருப்திப்படுத்தல் போன்ற நோக்கினைக் கொண்டு அமைந்திருந்தன. இவ் அடிப்படையில் தாய்த் தெய்வங்களும் அச்சம் ஊட்டுபவையாகவும், உயிர் ஊட்டுபவையாகவும் வழிபடப்படுகின்றன.

தாய்தெய்வ வழிபாட்டில் தொற்றுநோய், மாரிமழை, பயிர் வளமுடன் இணைந்த தெய்வங்கள் முக்கிய வழிபாட்டினைப் பெறுகின்றன. இவ்வழிபாடு பழங்குடி மக்கள் உட்பட அனைத்து சமூகங்களிலும் காணப்படுகின்றது. வடஇந்தியாவில் சீத்தாலதேவி உட்பட ஏழு சகோதரிகள் சீழ்தொடர்பான நோய்களைப் பரப்புபவர்களாக வழிபடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றனர். இத்தெய்வங்கள் குளிர்மையுடன் இணைந்தவர்களாய் உள்ளனர். இத்தெய்வம் ஸ்கந்தபுராணத்தில் வெள்ளையாடை அணிந்து ஒரு கையில் நீர்ப்பாத்திரம் ஏந்தி நெற்றிக்கண் கொண்டவளாக புயவயங்கள் அணிந்து முத்துக்களை அணிந்தவளாக சித்தரிக்கப்படுகின்றாள். ஹிரி(ஜீனோ), என்னும் கிரேக்க கடவுள் மேகத்தின் அரசியாகவும் மழைக்கு பொறுப்பானவளாகவும் காணப்படுகின்றாள். டெமிட்டர்(சொஸ்) பயிர் வளம், செளிப்பு வளர்ச்சியின் கடவுளாக கூறப்படுகின்றாள். இத்தகைய செளிப்புக் கடவுளர்களின் தொன்மங்கள் பொதுத்தன்மை கொண்டதாய் உலகெங்கும் பரவிக்கிடக்கின்றன. இத்தகைய தாய்த் தெய்வ மரபில் மாரியம்மன் தெய்வம் அம்மை போன்ற நோய்த்தொற்றுக் களிலிருந்து பாதுகாப்பவளாகவும் வெம்மையை நீக்கி மாரி மழை பொழிவிக்கும் விவசாயத்துடன் குளிர்மையுடன் இணைந்த தெய்வமாக வழிபடப்படுகின்றாள்.

மாரியம்மன் தெய்வவழிபாட்டில் தெய்வமாடும் பெண்களுடனான உரையாடலில் பெறப்பட்ட கதைகள் கொண்டே இக்கட்டுரை அமைக்கப்படுகின்றது. இக்கட்டுரையில் சில கேள்விகளை எழுப்பிச்செல்லாம். தாய்த்தெய்வக் கோயில்களில் பெண் பூசாரிகள் பூசை செய்தவை தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. இரண்டாவது இன்றும் பல பகுதிகளில் பெண்கள் மாதவிடாய்க் காலங்களில் கோயில்ச் சடங்குக் காலங்களில் ஊரிலிருந்து தங்கள் உறவினர் வீடுகளுக்குச் சென்று தங்கும் வழக்கு காணப்படுகின்றது. மற்றையது கோயிலின் பல சடங்குகளில் பெண்குழந்தைகளும் வயது முதிர்ந்த பெண்களுமே இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இதற்கு விதிவிலக்காக அரும்பு குத்துதல் சடங்கில் (நெல்லுக்குத்துச் சடங்கு) குழந்தை வரம் வேண்டி பெண்கள் நெல்லுக்குத்துகின்றனர். அத்தோடு திகிலி வெட்டை மாரியம்மன் கோயில் பசுபதி என்னும் பெண்ணொருவரால் உருவாக்கப்பட்டுள்ளது. பொத்துவில் மாரியம்மன், நாவற்குடா மாரியம்மன். பேத்தாளை மாவடி மாரியம்மன் போன்ற கோயில்கள் பெண்களால் தொடர்ந்து ஆதரிக்கப்பட்டு வந்து தற்போது ஆண்கள் முன்னுரிமை வகிக்கும் கோயில்களாக உள்ளன. இத்தகைய தகவல்களை வாய்வழிமூலமாகவும் கோயில் யாப்புகளிலிருந்துமே பெறக்கூடியதாய் உள்ளன.

பத்தாசி வழிபாட்டுக்கோயிலில் அதிகமாக ஆண்களே தெய்வமாடுகின்றனர். அவ்வாறு சில கோயில்களில் பெண்தெய்வமாடிகள் காணப்படினும் இரண்டாம்பட்சமாகவே நோக்கப்படுகின்றனர். சில கோயில்களிலே தலைமைத் தெய்வமாடியாக பெண்தெய்வமாடிகள் உள்ளனர். வெல்லாவெளி நாற்பதாம் கிராமத்திலுள்ள மாரியம்மன் கோயிலில் ஐந்து பெண்கள் தெய்வமாடுகின்றனர். அத்தோடு சில மாரியம்மன் கோயிலில் காத்தவராயன் தெயவத்திற்கு பெண்தெய்வமாடிகள் ஆடுகின்றனர். பெண்கள் தெய்வமாடிகளாக காணப்படாமைக்கான சில காரணங்களைப் பார்க்கலாம். குறிப்பாக மந்திர அறிவுடையவர்கள் மற்றும் கோயிலினுள் சடங்கு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் ஆண்களாய்க் காணப்படுவதனால் தெய்வமாடும் பெண்கள் விழும் பட்சத்தில் ஆண்கள் தூக்குதல் போன்ற காரணங்களால் பெண்களும் அவர் குடும்பங்களும் விரும்பவில்லை.

பெண்தெய்வமாடுபவர்களுடனான கலந்துரையாடல்களிலிருந்து சில உதாரணங்கள் கூறப்படுகின்றன. (பெண் தெய்வமாடுபவர்களின் பெயர்கள் தவிர்க்கப்படுகின்றன.) பேச்சியம்மனுக்கு ஒரு பெண் பத்துவருடமாக தெய்வம் ஆடி வந்துள்ளார். இவர் தெய்வம் ஆடுவதனை அவரது குடும்பம் ஆரம்பத்தில் விரும்பவில்லை. இருப்பினும் தனது விருப்பதிற்காய் ஆடிவருகின்றார். அவ்வாறு ஆடி வரும்போது ஒரு வருடம் கோயில்ச்சடங்கு நாளில் இவருக்கு மாதவிடாய் வந்துள்ளது. இதனால் இவர் கோயிலுக்குப்போகாமல் இருந்துள்ளார் கோயில் சடங்கு ஆரம்பமாகும் அன்று பகல்சடங்கில் இவர் தன்னை அறியாமல் உருவேறி கோயிலுக்குள் வந்துவிட்டார். இதனைப்பார்த்த குடும்பத்தவர்கள் கோயில் நிர்வாகத்திடம் கூற, தொடக்குக் காலத்தில் பெண் கோயிலுக்குள் வந்தால் பிரச்சனை ஏற்படும். அத்துடன் குடும்பத்தவர்களுக்கும் இதனால் குறைகள் ஏற்படும். இனி அவர் தெய்வம் ஆடக்கூடாது எனக் கூட்டிச்சென்று தெய்வம் ஆடாமலிருப்பதற்காய் மந்திரங்கள் செய்தனர். மூன்று வருடங்களின் பின்னர் இவர் மீண்டும் தெய்வமாட வந்தார்.

சில தெய்வமாடிகள் தாங்கள் விருப்பத்துடன் தெய்வம் ஆடவரவில்லை எனக் கூறுகின்றனர். அதில் ஒரு பெண் தனக்கு தீராத நோய் இருந்தது. நோயினைச் சுகப்படுத்த முடியவில்லை. பின்னர் தன கனவில் மாரியம்மன் தோன்றி கோயிலுக்கு வா எனக் கூறியதாகவும் தான் கோயிக்கு வந்த பின்னர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தன்னை அறியாமல் உருவேறியாடி பின்னர் தொடர்ந்து 12 வருடங்களாய் ஆடி வருகிறார். தற்போது தனக்கு ஒரு பிரச்சனையும் இல்லைஎனக் கூறினார். தெய்வம்தான் தன்னைக் காப்பற்றியது. இதனால்தான் ஆடுவதாகக் கூறுகின்றார் இவர் கணவரும் இவருக்கு உறுதுனையாக இருந்து வருகின்றரர்.

மற்றொரு பெண் தெய்வமாடி பத்து வருடமாகத் தெய்வமாடி வருகின்றார். இவர் ஆடுவதனை அவரது கணவரும் குடும்பத்தினரும் விரும்பவில்லை. இதனால் இவர் கணவர் வேறு திருமணம் செய்துள்ளார். இவர் கூறும்போது சாதாரண பெண்போல் கணவரின் தேவையினை நிறைவு செய்யும் பெண்ணாய் நான் இருக்கவில்லை என்பதால் கணவர் தன்னை விட்டுப் பிரிந்து சென்றதாகக் கூறினார். இவர் திருமணம் செய்து இரண்டாவது குழந்தை கிடைத்த பின்னரே தெய்வமாடுவதற்குத் தொடங்கியுள்ளார். இவர் ஆடுவதனை இவர் கணவர் விரும்பவில்லை. இதனால் ஆடாமல் இருக்க பல மருந்துகள் செய்தும் பயனளிக்காததால் இவர் மீண்டும் ஆடவந்துள்ளார்.

இவர் தெய்வமாடத் தொடங்கிய பின்னர் சைவ உணவு உட்கொள்பவராய் விரதங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி வந்துள்ளார். இதனால் இவரது கணவர் பிரிந்து சென்று மறுமணம் புரிந்துள்ளார். தற்போது தெய்வமாடுபவர் இரண்டு குழந்தைகளுடன் தாயுடன் வசித்து வருகின்றார்.

மற்றுமொரு பெண் கூறுகையில் இவர் தெய்வம் தன் உடலில் வருவதனை உணர்ந்து அதனை விலத்துவதற்கான செயல்களைச்செய்கையில் கழிப்புக்கு கொண்டுசென்ற பானை உடைந்துள்ளது. அதனைப்பார்ந்து பயந்து குடும்பத்தவர்கள் இவரைத் தெய்வமாட அனுமதித்துள்ளனர். ஆனால் அவர் விரும்பவில்லை. இவர் தெரிவிக்கையில் 'எனக்கு தெய்வம் ஆட சரியான பயம். விரும்பமும் இல்ல. நான் ஒவ்வொரு நாளும் கோயிலுக்கப் போய் இதத்தான் கேட்டநான் கடவுளே தாயே என்னத் தெய்வம் ஆட மட்டும் விட்டுறாத. இத மட்டும் செஞ்சிதா, என்ன ஆக்கள் எல்லாம் பிடிச்சு தூக்க விட்டுறாத தாயே என்னக் காப்பாத்திடு என்டு எவ்வளவு கேட்டிருப்பன். ஆனா இந்தக் கிளடி கேட்கல. என்ன எடுத்துத்து.' என்றார்.

அதிகமான பெண்கள் தெய்வமாடுவதற்கு விரும்பம் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் இதனை தன்னிலிருந்து விலத்த முடியாதவர்களாய் காணப்படுகின்றனர். அத்துடன் பெண் பற்றிய சமூகப்பார்வை இங்கு முக்கியமானது. பெண் என்பவள் கணவன், குழந்தை என்னும் குடும்ப அமைப்புக்குள் உட்பட்டவளாகவே காணப்படுகின்றாள். அதனை கடந்து வரும்போது அக்குடும்ப அமைப்பிலிருந்து விலக்கப்படுகின்றாள். இத்தகைய விலத்தல்களிலிருந்து பாதுகாப்பதாகவே தெய்வமாடுவதனை ஏற்கச்செய்வதற்கான கதைகள் உருவாக்கப் படுகின்றன. தெய்வமாடியதன் பின்னர் நோய் பிணி தீர்ந்துள்ளது. கனவில் வந்து தெய்வம் ஆடும்படி அம்மன் கூறுதல், வீட்டிற்கு பாம்புவருதல், தெய்வமாடினால் செய்வினைகள் பலிக்காமல் விடல் போன்ற நம்பிக்கைகள் தெய்வமாடும் பெண் களிடையே காணப்படுகின்றன. பெண்ணின் மாதவிடாய் இயல்பான உடலியல் இயக்கமாய் உணரும் அறிவு முறை காணப்படாதவிடத்து அச்செயற்பாடு புனிதமற்றதாய் பண்பாட்டு வெளியில் உணரப்படுகின்றது. அதேகுருதி வளமையின் குறியீடாய்க் கொண்டாடப்படுகின்றது. பெண் இரட்டைத்தன்மையுடன் கருதப்படுகின்றாள். எனவே இதனைக் கொண்டே பெண் தெய்வமாடிகளும் பார்க்கப்படுகின்றனர்.

பெண்தெய்வமாடிகள் சிலரே விரும்பி ஆடுகின்றனர். பலர் தன்னில் தெய்வத்தின் கலை இருந்தபோதும் கோயிலுக்கு ஆடவருவதனைத் தவிர்க்கின்றனர். இதனால் வேறு ஊர்களுக்குச் சென்று வசிக்கின்றனர். சிலர் வீடுகளில் மட்டும் ஆடிவருகின்றனர். ஆண் தெய்வமாடுபவர்கள் பரம்பரையாகவே கோயிலில் ஆடிவருகின்றனர். ஆனால் பெண்கள் தங்கள் குழந்தைகள் தெய்வமாடுவதனை விரும்பவில்லை. தங்களைச் சமூகம் தெய்வமாய்ப்பார்க்கும் போது நாமும் அதற்குரிய வகையில் இருக்க வேண்டும். அதனால் குடும்பத்தில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இதனால் பல பெண்கள் தெய்மாடுவதனை விரும்பவில்லை. மாரியம்மன் தெய்வ வழிபாட்டில் தெய்மாடுபவர்களாய் பெண்களின் வகிபங்கு என்பது வரையறைகளைக் கொண்டதாகவே காணப்படு கின்றது. அத்தோடு கோயில் வழிபாட்டுச் சடங்குகளிலும் பெண்களின் பங்கு மறைமுகமாகவே காணப்படுகின்றது.

**- கலாவதி கலைமகள்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஞ்சு – மேரி

மஞ்சு, மேரி இவ்விரண்டு திரைப்படங்களும், மிக. முக்கியமான. பல விடயங்களை எடுத்துப் பேசும் படமாக நான் இப்படத்தை பார்க்கின்றேன் பல சதாப்த காலங்களுக்கு முன்னரே பல திருநர்கள் இந்த சமூகத்தில் தமது அடையாளங்களை வெளிப்படுத்த முடியாமல் இருந்திருப்பார்கள் என்பதை இப்படத்தின் மூலம் நான் விளங்கிக் கொள்கின்றேன். ஏனென்றால் இப்படி (மஞ்சு, மேரி) இருவருமே தம்முடைய சமூக இருப்புத்தன்மையைப் பற்றி பல விடயங்களை கூறியிருக்கின்றனர். காலங் காலமாகச் சமூகக் கட்டுப்பாடுகள் இச் சமூகத்தில் எவ்வாறு இன்று வரை இருந்து வருகின்றது என்பதை நாம் அனைவருமே நன்கு அறிந்த விடயங்களே. அத்தோடு (மஞ்சு மேரி) திரைப்படங்கள் பல்வேறு விடயங்களை தொட்டுச் செல்கின்ற திரைப்படமாக இருக்கின்றது. சமூக கட்டுப்பாடுகள், குடும்ப முறைகள், மதம், கலாச்சாரம், கலை, இடப் பெயர்ப்பு, போராட்ட அமைப்புகள் எனப் பல விடயங்களை பேசுகின்றது . மஞ்சு திரைப்படத்தில் மஞ்சு பிறந்த இடத்தில் ஏற்பட்ட, இனக்கலவரம் காரணமாக வடக்கு நோக்கி இடம் பெயர்ந்து தற்போது வடக்கில் வாழ்ந்து வருவதாக கூறுகின்றார்.

தம்மை அடையாளப்படுத்த முடியாமல் கலையின் ஊடாக தமக்கு விருப்பமான ஆடைகள் மற்றும் ஆவணங்கள், ஒப்பனை ஊடக தனது உணர்வுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றார். கலை உணர்வு களுக்கு கிடைக்கின்ற கௌரவம் ஒரு புறம் சமூகத்தின் கேலி கிண்டல்கள் இன்னொரு புறமாகவும் தனது வாழ்க்கையை கலையினூடாக வாழ்ந்து கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது

மஞ்சு வாழ்ந்த சமூகத்தில் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த நண்பர்கள் 1990 ஆம் ஆண்டு LTTE அமைப்பினரால் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட விடயங்களையும் அவர்கள் வாழ்ந்த வாழ்வியல் முறைகளையும் கூறி இருக்கின்றார்.

மஞ்சு மத வழிபாடுகளுடன் வேலை செய்து கொண்டும் நடனம் ஆடிக்கொண்டு இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

மேரியின் கதையில் தன்னுடைய அடையாளத்தை வெளிப்படுத்தப் பல சவால்களையும் போராட்டங்களையும் கடந்து சுய தொழிலை ஓர் ஆதாயமாக பயன்படுத்தி குடும்பத்திலும் சமூகத்திலும் தனக்கான ஓரிடத்தை உருவாக்கியுள்ளார், இவர் கூறும்போது தன்னை ஆரம்பத்தில் எந்த நிகழ்வுகளிலும் அழைப்பதில்லை என மனமுருக பேசி இருக்கின்றார் ஆனால் தற்போது அனைத்து நிகழ்விலும் முதன்மை விருந்தினராகவும் ஆசீர்வதிக்கின்ற ஒரு நபராகவும் சமூக ஏற்புடமை இருப்பதாக அவர் கூறுகின்றார்.

ஆரம்பத்தில் இந்துவாக இருந்தபோது இந்து மதத்தில் இருக்கின்ற ஆடை கட்டுப்பாடு காரணமாக கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதாகவும் இன்று அவர் தனது வீட்டில் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தை உருவாக்கி அயலவர்களுடன் இணைந்து வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றார். மதத்தின் மீது மிகவும் ஆழமான நம்பிக்கை யுடையவராகவும் காணப்படுகின்றார்.

**– ஏஞ்சல் குயின்ரஸ்**
Jaffna Transgender Net work



நவீனமென்றும், அபிவிருத்தியென்றும்;
விதைகளை இழந்து விட்டோம்.
விளைநிலங்களை அழித்துவிட்டோம்.
மனித நுண்ணறிவையும் இழந்து
இயந்திரங்களாகாது இருப்போமாக!!

இழந்தவைகளை மீட்கவும்;
இருப்பவற்றை காக்கவும், வளர்க்கவும்
இப்பூவுலகில் வாழ்வாங்கு வாழவும்


மனித நுண்ணறிவையும் இழந்து
இயந்திரங்களாகாது இருப்போமாக!!

**பேராசிரியர்.சி.ஜெயசங்கர்**



Digitized by Noolaham Foundation.

# அவுரி




**அ**வுரி - கவடு கிழிஞ்சான் என்று நாங்கள் பரவலாகக் கூறும் காவிளாவின் இலை போன்ற வடிவமைப்பில் காணப்படும். அவுரி இலையினை நடுவாக கிழிக்கும் போது நேர்கோடாக கிழியக் கூடியது. ஆனால் காவிளா இலை கவடு கிழிந்தது போல் கிழிபடும். அவுரியின் காய்கள் மிகச்சிறிய அளவில் இருக்கும். கொத்துக் கொத்தாகக் காய்க்கும் போஞ்சிக்காய் போல் காணப்படும்.

இப்படியான வடிவம் கொண்ட அவுரியை விசக்கடி அதாவது பாம்பு, மட்டத்தேள், தேன்பூச்சி, குளவி போன்ற வற்றின் விசத்தினை போக்கு வதற்கும் கிரந்தி, சேத்துப்புழு, வேறு தோல் கடிகள் என்பவற்றிற்கெல்லாம் மருந்தாக பயன்படுத்த முடியும்.

எப்படியென்றால் இந்த தாவரத்தினது இலையை ஒரு பிடி அளவு எடுத்து 4அல்லது 5மிளகையும் சேர்த்து தண்ணீர் விடாமல் தேசிப்புளி விட்டு நன்கு அரைத்து எடுத்துக்கொண்டு விசக்கடி, கடி உள்ள இடத்தில் சிறிது சிறிதாகக் காயவிட்டுக் காயவிட்டுக் பூசிக்கொள்ள வேண்டும். கடைசி மூன்று நாட்களுக்கு ஒருமுறை புதிதாக அரைத்துக்கொள்வது நன்மையானது.

தகவல் வழங்கியவர் புன்னச்சோலையைச் சேர்ந்த ராணி அம்மா என்று ஊரவர்களால் அன்பாகவும் மரியாதையாகவும் அழைக்கின்ற வாகீசன் இந்திராணி

இவர் மாமா பிரபல்யமான உள்ளூர் வைத்தியர். அவரிடம் இருந்து தனது அம்மா அறிந்துகொண்ட விடயங்களை சிறு பிராயத்தில் தங்களுக்கு நோய்கள் வந்த போது செய்த மருந்துகளை கூர்ந்து அவதானித்த தனாலும் எங்களது உள்ளூர் வைத்திய முறைகளை ராணி அம்மா அறிந்ததாகத் தெரிந்துள்ளார். ராணி அம்மா சிறு



வயதாக இருந்தபோது உடம்பில் ஏற்பட்ட கடிக்காக அவரது தாய் அவுரி இலையையும் தேசிக்காயையும் வெட்டிப்போட்டு தண்ணீர் சுட வைத்து குளிப்பாட்டியதாக கூறுவதோடு, தற்போது இவரது உறவினர்கள் பலருக்கு இந்த வைத்திய முறைகளை பயன்படுத்தி தோல் கடிகள் சார்ந்த நோய்களை குணப்படுத்தியுமுள்ளார்என்றும், அவுரியை அறியாத பலருக்கு அறிமுகப்படுத்துவதோடு, இலை தேவை என்று தேடித்திரிபவர்களுக்கு அவற்றை தேடி எடுத்துக் கொடுத்தும் வருகிறார் ராணி அம்மா.

**- சிந்து**

# ஆளாகி விட்டேன்

**- காத்தநகர் புத்திரி..**

**ஏ**தற்கு நான் ஆளளாகிவிட்டேன்
புரியாத புதிராகவே என் பதின்ம வயதில் ....

இதற்குத்தான் என்று
அறியாத வயதில்
காதலையும் காமத்தையும்
பிரித்துணரா தருணத்தில் திருமணம் என்ற
போர்வையில்
அருவத்த தருணங்கள்...

ஏனெனில் நான் ஆளாகி விட்டேனாம்

விவாகம் என்ற பந்தத்தில் வலிகாரன் எனும்
தோரணையில்
என் தகப்பன் இட்டுக்கொடுத்த ஒரு
கையொப்பத்திற்காய்
தொலைந்தது என் எதிர்காலம்
ஏனெனில் நான் ஆளாகி விட்டேனாம்...

என் குழந்தைத் தனம் மாறுமுன்னே
என்புகளும் முற்றாத என் இடுப்புக் குழிக்குள்
குழந்தையை சுமக்க வைத்த தண்டனை தான்
ஏன் எனக்கு?

ஏனெனில் நான் ஆளாகி விட்டேனாம்...

அறியாதவனின் தடவல்களும் அணைப்புகளும்
ஏன் அதையும் தாண்டிய ஊடல்களும் எனக்கு
புரியாத புதிராகவே
கழிந்த நாட்களே அதிகம்...

ஏனெனில் நான் ஆளாகி விட்டேனாம்...

என்னைப்பற்றி நானே சிந்திப்பதற்கு வயது
நாற்பதைக் கடக்கையில்
என்னவொரு ஆச்சரியம்
இப்போது நான் ஒரு அம்மம்மா.......
அய்யகோ..

என்மனச் சிந்தயை மழுங்கடித்து
அறிவதற்கும் மறுப்பதற்கும் அவகாசம்
இன்றியே
சிறுமியாகிய எனக்கு இட்ட கடிவாளமா
கலியாணம்?
இப்போது புரிகிறது நான் எதற்கு ஆளாகினேன்
என்று..

பெற்றவர்களே உங்கள் சுமை நீங்க என்
குருவித் தலையில் பாறாங்கல்லை
தூக்கி வைத்தது நியாயமா சொல்லுங்கள்...

நான் இழந்த என் இளமை எனும் சுதந்திரத்தை
எப்போது நான் மீளப்பெறுவேன்...
பறிகொடுத்த என் கல்வி உரிமையை யார்
எனக்கு மீட்டித்தருவது
என்னுடைய தேடல்களும் தேட்டங்களும்
யாரோ ஒருவருக்காகவன்றி எனக்காக இல்லை
என்பதை புரிகின்றபோது...

உடனடியாய் மரித்து மறுபிறவி எடுத்தாயினும்
எனக்காக நான் ஆளாகும்
வரம் ஒன்று கேட்பேன் தருவாயா
நீ எனக்கு...
எனை யாரும் நுகராமல் இருப்பதற்காய்....

# ஏற்க மறுக்கிறது




**உ**ங்களுக்கு ஈடாக யாருமே
எனது வாழ்க்கையில் வரமுடியாது
எல்லாருமே சொல்லிறாங்க நீங்க
உயிரோட இல்லை என்று ஆனால்
அதை எனது மனம் நம்ப மறுக்கிறது

திரும்ப வந்திடுங்க அண்ணா
உங்களது நினைவுகளோடு
எனது நாட்கள் கடந்து செல்கிறது
உங்களது வருகைக்காக காத்திருக்கிறேன்.

**- ருஷாணி**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மனிதம் உயிர் வாழ்கிறது

உச்சி வானத்தை சூரியன் தொட்டுக் கொண்டிருக்கிறது. ஓங்கி வளர்ந்த மரங்களிடையே தட்டியில் வைத்த படி கிடத்தப்படுகிறாள் சஹானா. அவளின் கைகளில் சேலைன் பாய்ந்து கொண்டிருக்க அடி வயிற்றுப் பகுதியிலிருந்து இரத்தம் கொப்பளித்துக் கொண்டிருக்கிறது.

அவளோடு கொண்டுவரப்பட்ட காயப்பட்ட ஜீவன்கள் அனைத்தும் மரணத்தை அணைத்துக் கொண்டது போல் மௌனித்துக் கிடைக்கின்றன. அவர்களுக்கு வேதனையும் விளங்கவில்லை, அவர்கள் தாகத்தால் துடிக்கவும் இல்லை

ஈடு செய்ய முடியாத குருதிப் பெருக்கால் தாகத்தின் உச்சம் சஹானாவின் உதடுகள் வெடித்து துகள்களாய் பறக்கிறது. "தண்ணீ தண்ணீ " என்று பதறுகிறாள் சஹானா. அங்கே நின்ற சிப்பாய்க்கு எதுவும் விளங்கவில்லை. Water please என்றாள். உடனே ஒரு சிப்பாய் தண்ணீர் போத்தலோடு வேகமாக ஓடி வந்தான். சஹானாவும் உயிர் துறந்தாலும் பரவாயில்லை தாகத்திற்கு தண்ணீர் தண்ணீர் என்றாள் சஹானாவின் அருகில் நின்ற சிப்பாய் தண்ணீர் போத்தலை பறித்து விட்டு "புளுன் அரங் என்ட"என்றான் அந்த சிப்பாய் பஞ்சோடு ஓடி வந்தான் தண்ணீரால் அந்த பஞ்சை நனைத்து வெடித்து பொரிந்து கிடந்த சஹானாவின் உதட்டில் பஞ்சை வைத்தான் அந்த சிப்பாய். சஹானாவினால் தாகத்தை தாங்க முடியவில்லை உதட்டிலிருந்தது பஞ்சை வாயில் எடுத்து மென்று அதிலிருந்து சொட்டு தண்ணீரை தன் தொண்டைக் குழிக்குள் விட்டாள். வெறும் பஞ்சை துப்பி விட்டு மீண்டும் தன் கண்களால் தேடினாள் அந்தப் பஞ்சில் ஒரு துளித் தண்ணீர் இருக்காதா? என்ற ஏக்கத்துடன் அவசரமாக அம்பியூலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டாள் சஹானா. அவளோடு இன்னுமொரு வயோதிபர் உணர்வற்றுக் கிடக்கிறார். அவரின் முதுகுப்புறம் துப்பாக்கி வேட்டுக்களால் பெயர்க்கப்பட்டு பிளந்து கிடக்கிறது. சஹானாவின் அலறல் தண்ணீர் என்று ஒலித்துக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக சத்திர சிகிச்சை அறைக்குள் கொண்டு செல்லப்பட்டாள் சஹானா. அப்போது கடிகார முள் பகல் 12:45ஐ காட்டியது. அவளின் உடலில் துப்பாக்கி வேட்டுக்கள் பாய்ந்து 13 மணித்தியாலங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்னும் மயங்காமல் உயிரோடு போராடிக் கொண்டிருந்தாள் சிறுமி சஹானா.

சத்திர சிகிச்சை அறை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பச்சை நிற ஆடைகளுடன் முகக் கவசங்களுடன் வைத்தியர்கள் சுற்றிவர நின்று கொண்டு சிங்களத்தில் பேசினார்கள். சஹானா "சிங்களம் தெரியாது" என்றாள். அங்கிருந்து ஒரு சத்தம் ஒலித்தது அவள் தாய் மொழியில் "உங்களை சுட்டது யார்?" என்று. பதில் சொல்ல சஹானாவின் உதடுகள் மறுத்தது. தமிழில் பேசியது யார் முஸ்லிமா? தமிழரா? இயக்கத்துக்கு ஆதரவானரா? என்ற கேள்விக்குள்ளானது சிறியவளான சஹானாவின் மனது. உயிருக்கு போராடும் அந்த சந்தர்ப்பத்திலும் சமயோசிதமாக "யார் என்று தெரியாது" என்றாள். இயக்கத்திற்கு ஆதரவானவர் என்றால் அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் என்றால் என்னை பழிவாங்கி விடுவாரோ? என்ற அச்சம் அவளை உண்மையை பேசத் தடுத்தது. பேசிக் கொண்டிருக்கும் போதே சஹானாவின் கைகளில் போடப்பட்ட ஊசி மருந்துகள் அவளை உணர்வற்ற நிலைக்கு கொண்டு சென்றது.

கண் விழித்துப் பார்த்தாள் சஹானா இரவாகிவிட்டது. வைத்தியசாலையில் இருக்கிறேன் என்ற சாட்சியாய் சேலைன் பாய்ந்து கொண்டிருந்தது. உடல் முழுவதும் வயர்கள் இணைக்கப்பட்டிருந்தது. நெருப்பிலிடப்பட்ட புழுவாய் துடிக்க முடியாமல் துடித்தாள் சஹானா. அன்றிரவு சத்திர சிகிச்சையின் பின்னர் அவள்பட்ட வேதனை முதல் நாள் இரவு பட்ட துப்பாக்கி வேட்டு வேதனையை விட பல மடங்கு அதிகமாகமாய் இருந்தது.

அவளோடு காயப்பட்டு கொண்டுவரப்பட்ட தனது மூத்தமாவைப் பற்றியோ, அன்றிரவு தன் கண் முன்னால் சுடப்பட்டு மரணித்த மூத்தப்பாவைப் பற்றியோ, கண்னெதிரே சுட்டு வீழ்த்தப்பட்ட உறவுகளைப் பற்றியோ அவள் சிந்திக்கவில்லை. அவளின் வேதனை சக்திக்கு அப்பால் பட்டதாயிற்று.

மறுநாள் காலையில் பொலிஸார் விசாரணைக்காக வந்த போது சஹானாவின் உதடுகள் உண்மையை தைரியமாகப் பேசியது "பயங்கரவாதிகள் தான் என்னை சுட்டார்கள்" என்றாள். சஹானாவை பராமரிப்பதற்கோ, கவனிப்பதற்கோ அவரின் உறவுகள் யாரும் வைத்தியசாலையில் இருக்கவில்லை. இராணுவத்தின் உதவியுடன் விமானத்தில் கொண்டு செல்லப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டாள் சஹானா. எந்தவித முன்னாயத்தமின்றி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சஹானாவுக்கு இரத்தம் தோய்ந்த ஆடைகளைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.

வைத்தியசாலைக்கு தங்கள் உறவுகளை பார்வையிட வந்த சிங்கள மக்களே ஆடைகளையும், அத்தியாவசிய பொருட்களையும் அங்கிருந்த காயப்பட்டவர்களுக்குக் கொடுத்து உதவினார்கள்.

சஹானா தன்னுடைய வலி வேதனையை அவஸ்தை என்பவற்றை சொல்வதற்கும் தன் தாய் மொழியில் பேசுவதற்கும் யாருமில்லை. சுற்றியிருந்த தாதியர்கள் அனைவரும் சிங்களவர்கள். அவர்களுடைய பாஷை அவளுக்கு விளங்கவில்லை.

சஹானாவைப் பரிசோதிப்பதற்கு வைத்தியர் குழாம் ஒன்று வந்தது. அப்போது ஒரு பெண் வைத்தியர் சகானாவோடு தமிழில் பேசினார். அவருடைய கருணையும் அன்பும் ஒரு தாயைப் போல் இருந்தது. இருந்தும் சஹானாவின் மனதில் ஒரு பயம் இருந்தது. அந்தப் பெண் வைத்தியர் யாரென்று சஹானாவுக்குத் தெரியவில்லை அவருடைய பேச்சும் அன்றைய நிலைமைக்கு மிகவும் ஆறுதலாய் அமைந்திருந்தது. தன்னோடு காயப்பட்டு வந்த மற்றவர்களையும் மிகவும் கருணையோடும் எவ்வித அருவருப்புமின்றி காயங்களை சுத்தப்படுத்தி மருந்து கட்டினார் அந்த வைத்தியர். சிறுமிகளுக்கு மருந்து கட்டும்போது அவர்களை அழவிடாமல் சொக்லேட் கையில் கொடுத்து அரவணைத்துக் கொண்டு அவர்களுக்கான சிகிச்சைகளைச் செய்தார்.

நீண்ட நாட்களாக படுத்த படுக்கையாக அசைவின்றிக் கட்டிலில் கிடந்த சஹானாவின் முதுகுப்புறம் அரிப்பாகி விட்டது. தாதியர்கள் சஹானாவை சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது அங்கு வந்த டாக்டர் அங்கிருந்த தாதியரிடம் "சுட்டக் உஸ்ஸன்ட" என்றார். தாதியர்கள் சஹானாவின் முதுகுப் புறத்தை உயர்த்திக் கொடுத்தார்கள். அந்த வைத்தியர் கட்டிலில் ஒரு பக்கம் ஏறி அமர்ந்து கொண்டு சஹானாவின் முதுகுப் புறத்தை அவரின் முதுகோடு சேர்த்து வைத்துக் கொள்ள தாதியர் ஒருத்தி முதுகுப் புறத்தை சுத்தம் செய்து ஓடிக்குளோன் பூசி விட்டாள். அதுவரைக்கும் டாக்டர் அசையாமல் சஹானாவிடம் பேசிக்கொண்டு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது தான் சஹானா "உங்க பெயர் என்ன? என்றாள்" அதற்கு அவர் "என்ட பெயர் அனா நான் யாழ்ப்பாணம்" என்றார். சஹானாவை மீண்டும் மெதுவாக கட்டிலில் படுக்க வைத்துவிட்டு அந்த இடத்திலிருந்து நகர்ந்து செல்கிறார்.

டாக்டர் அனா நடந்து செல்வதை ஏக்கத்தோடு சஹானா பார்த்துக் கொண்டிருக்கிறாள். வெள்ளை நிறக் கோட்டின் முதுகுப்புறம் இரத்தக் கறையால் அசிங்கப்பட்டிருப்பதைப் பார்த்து சஹானாவின் உள் மனது அவளுக்குள் பேசிக் கொள்கிறது "பயங்கரவாதிகளின் காட்டுமிராண்டித் தனமான இனவெறித் தாக்குதலால் ஓடப்பட்ட குருதி சஹானாவின் முதுகுப் புறத்தில் கறையாக ஒட்டிக் கிடந்து டாக்டர் அனாவின் வெள்ளை நிற கோட்டின் பின்புறத்தை அசிங்கப்படுத்தினாலும் டாக்டர் அனாவின் உயரிய சேவை சஹானாவின் மனதில் ஒட்டிக் கிடந்த இனவாதம் என்ற கொடூர மாயையை அகற்றி இன்னும் மனிதம் உயிர் வாழ்கிறது" என்பதை அவள் மனதுக்குள் ஒப்புக்கொள்ள வைக்கிறது.

**நன்றி.**

யாவும் உண்மை

**ஜாஹிறா அமீன் (BA),**
தென்னை பயிர்ச்செய்கை சபை, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.

# விழித்திடு பெண்ணே!




அமைதி காக்க சொல்கிறதே உலகு
அனுபவம் கொண்டு உதித்திடு உலகில்
நீயும் பெண் என.
உண்மையில்லா உறவும்
சுகந்திரமற்ற பாதுகாப்பும்
ஏனோ பெண்னே உனக்கு!
தோழமை கொண்டால் தூற்றுகிறார்
கூட்டுச்சேர்ந்த கூத்திகள் என்று.
அவர்களுக்கு மகிழ்ச்சி அதுவாம்.
சந்தோசம் எனக்கொண்டால்
எமக்கானது கண்ணீர் துளிகள் மட்டுமே
விழித்திடு பெண்னே!! எழுந்திடு உலகில்

**- அராலியூர் மகேஸ்வரி ராஜினி**

---

# தனிமை விரும்பி



நானும் தனிமை விரும்பி தான்,
சுற்றிலும் கூட்டம்
ஏன் என்று கேட்க பலர்
இலவச அறிவுரைகள் கேட்காமலே
பெரும் பாக்கியம் பெற்றவளாய்,
அவ்வப்போது நினைத்து கொள்வேன்,
எப்போது தனிமை கிடைக்குமென,
முகம் பார்த்து பேச யாருமில்லாமல்
சாலரத்தை திறக்க
தட்டாந்தரை மறைய
நிமிர்ந்து நிற்கும் கட்டிடங்கள்,
சுற்றிலும் குவிந்த அழகு
ஆனால் ரசிக்க யந்திரக் கண்கள்,
தனியொரு உலகில்
தனக்கான கூட்டமென
வாசிப்பவர்களின் மத்தியில்,
என்னையும் என் புதிய தவிப்பையும்
உணரும் வரையில்..
நானும் தனிமை விரும்பி தான்

**- மது**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சவுக்கடி வீடு

எனது பெயர் மீரா. எனக்கு தற்போது 26 வயது ஆகிறது. நான் transgender. ஆரம்பத்தில் நான் ஒரு ஆணாக பிறந்து என்னுடைய உடல், மனதில் பெண்ணாக உணர்ந்தமையினால் நான் என்னுடைய அடையாளத்துடன் வாழ முடிவு செய்தேன். நாங்கள் எங்களுடைய அடையாளத்துடன் வாழ்வது என்பது அவ்வளவு எளிதான விடயமல்ல. உதாரணமாக நாங்கள் தமிழர் என்ற அடையாளத்துடன் வாழ்வதற்கு எவ்வளவு போராடினோம், எத்தனை உறவுகளை இழந்தோம் எத்தனை உயிர்களை பலி கொடுத்தோம் சொந்தங்களை இழந்தோம், அநாதையாக்கப் பட்டோம், கை, கால் இழந்தோம். இவ்வாறாக அனைத்தையும் இழந்த பின்பும் எங்களுடைய அடையாளத்திற்கு எந்தவொரு மதிப்பும் கிடைக்கவில்லை. அது போன்றுதான், என்னுடைய வாழ்க்கையில் எனது பெண்மையை வெளிப்படுத்தும் போது நான் இழந்தவை.

ஆரம்பத்தில் எனது மனதை பறி கொடுத்தேன். ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி என்னுடைய உடலை இழந்தேன். பெற்றோருக்கு ஒரு அவமான சின்னமாக வெளிப்பட்டேன். இதனால் பெற்றோர்களே 'சீ போ' என ஒதுக்கினர். கல்வி கற்று ஒரு நல்ல நிலையை அடையலாம் என கனவு காணும் நேரத்தில் அதுகூட எனது வாழ்க்கையில் கரைந்து விட்டது. எனது அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கு இத்தனையும் நான் இழக்கவேண்டி இருந்தது. அத்தனையும் இழ்ந்த பின்பு எனக்கான ஒரு உத்துசக்தியாக ஒற்றை விரல் கொடுத்தனர் என் இனிய நண்பர்கள். வீட்டை விட்டு வெளியே வந்ததும் எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை அந்த தருணத்தில் அவர்களின் உதவியுடன் எனக்கான தற்காலிக தங்குமிடம், உணவு என்பன கிடைத்தது. அன்றில் இருந்து நான் என்னுடைய முயற்சியில் வெளிவர வேண்டும் என நினைத்து என்னுடைய உழைப்பை அதில் விதைத்தேன். அதன் பயனாக எனக்கு சமூகத்தில் கிடைத்த முதல் அங்கிகாரம் சவுக்கடி வீடு. இது மட்டகளப்பில் யாரும் பெரிதாக நடமாடாத இடமாக உள்ள சத்துருக்கொண்டான் கரையோரத்தை சார்ந்த இடம். இது சுனாமி வீட்டுதிட்டத்தில் கொடுக்கப்பட்ட நிவாரண வீடு. அது எனக்கு மாதாந்தம் 2500/= வாடகைக்கு கொடுக்கப்பட்டது. 1 அறை, 1 சமயலறை, மண்டபம் கொண்ட பெரிய வீடு. அக்கம் பக்கத்தில் பெரிதாக ஆட்கள் நடமாட்டம் இல்லை. ஆரம்பத்தில் சற்று பயமாக இருநதது.

காலம் செல்லச் செல்ல எனக்கு அது பழகிவிட்டது. அந்த நேரத்தில் எனக்கு துணையாக நானும் இருக்கிறேன் எனும் குரலுடன் சிந்துஜா கட்டாரில் இருந்து வந்து என்னுடன் தங்கி கொண்டாள். பின்பு எங்களுடைய வாழ்க்கையை ஓரளவு சுயமாக நடாத்தக்கூடியதாக இருந்தது. அந்த நேரத்தில் எங்களுக்கு என்று இருந்தது ஒரே ஒரு பழைய மோட்டார் வாகனம் ஒன்று. அதனை என் வாழ்க்கையில் மறக்கவே முடியாது. அவள் பெயர் சரோசா நான் எங்கு சென்றாலும் ஒற்றை கண்ணாடி இல்லாத அவளோடுதான் பயணிப்பேன், எனக்கான நல்ல நண்பி என்றுகூட அவளை கூறமுடியும்.

நானும் எனது நண்பி சிந்து அங்கு வாழ்ந்த காலத்தில் பல பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளோம். நாங்கள் எங்களுடைய சவுக்கடி வீட்டில் இருந்து மட்டக்களப்பு வீட்டிற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டும் ஏதாவது பொருட்கள் வாங்குவதென்றால், ஏனென்றால் அங்கு கடை வசதி எதுவுமில்லை. அவ்வாறு நாங்கள் வந்து செல்லும் வேளையில் அந்த வீதியில் police வாகனங்கள் பரிசோதிப்பதற்காக நிற்பர். அவர்களிடம் இருந்து நாங்கள் தப்பித்து வருவது மிகவும் கடினமான காரியம். நாங்கள் அங்குதான் இருக்கிறோம் என தெரிந்தும் எங்களை அவர்கள் ஆரம்பத்தில் விடுவ்திில்லை. அந்த நேரத்தில் அங்கு வேறு யாராவது இருந்தாலும் எங்களுக்காக அவர்கள் பரிந்து பேசுவதில்லை. நாங்களே எங்களுக்காக போராடவேண்டிய நிலை. அவர்கள் எதிர்பார்ப்பது ஒருதடவையாவது எங்களுடன் உடலுறவில் இருக்கவேண்டும் என்பதே அதற்காக அவர்கள் எங்களிடம் பல தடவைகள் தவறாக நடந்துகொள்ள முற்பட்டுள்ளனர். சில சமயங்களில் எங்களால் எதுவும் செய்ய முடியாத நிலையால் நாங்களாக இணங்க வேண்டிய தருணம் ஏற்பட்டது சிறிது காலம் இது எங்களை தொடர்ந்தது. பின்பு அது எங்களுக்கு பழகிவிட்டது.

அந்த சவுக்கடி வீடானது எனக்கு மட்டுமல்லாது என்னை சார்ந்த பலருக்கு அது ஒரு புகலிடமாக இருந்தது. ஆரம்பகாலத்தில் நான் வாழ்ந்து வந்தேன். பின்பு என்னுடன் நிசானா எனும் புதிய நண்பி வந்து சேர்ந்து கொண்டாள். அவள் அங்கு வந்ததும் எங்களது குடும்பம் பெருகியதை போல ஒரு உணர்வு எங்களுக்கு இருந்தது. அதற்கு முன்னர் சிறிதுகாலம் யஹாசன் அந்த வீட்டில் எங்களுடன் பயணம் செய்தான். நாங்கள் அங்கு வாழ்கின்ற நேரத்தில் எங்களுக்கு எந்தவொரு நிரந்தரமான தொழிலும் இருக்கவில்லை. நிரந்தர வருமானமும் இருக்கவில்லை. சில சமயங்களில் நாங்கள் சமைக்காத நாட்களும் இருந்ததுண்டு. சாப்பிடாமல் பட்டினியாக இருந்த நாட்களும் உண்டு. இந்த நிலை எப்போது மாற்றமடையும் என நாங்கள் எதிர்பார்த்த நாட்களும் உண்டு.

எங்களது சவுக்கடி வீட்டில் எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் அங்கு சந்தோஷம் என்றும் குறைவாக இருந்ததில்லை. என்னைப் போல உள்ள பல நண்பர்கள் வெளிப்படையாக தங்களது அடையாளங்களை வெளிக்காட்டக்கூடிய ஒரு இடமாக இருந்தது. எங்களது வீட்டில் எங்களது நண்பர்கள் தங்களது வேலையை பகலில் முடிந்துவிட்டு இரவில் வருகைதருவர் நாங்கள் மகிழ்ச்சியாகவும் வெளிப்படையாகவும் அங்கு இருப்போம். இந்த சவுக்கடி வீட்டிற்கு வந்த பின்பு நாங்கள் எங்களுடைய வாழ்க்கையில் நிறைய அனுபவங்களை எங்களுக்கு சொன்னது, இந்த சவுக்கடி வீடு. இங்குதான் நான் எனது தாதியர் கல்வியை மேற்கொண்டேன். பின்பு என்னுடைய பால்மாற்று அறுவை சிகிச்சைக்கு சென்றேன். பின்னர் என்னுடைய பால்மாற்று அறுவை சிகிச்சையின் பின்னர் நடக்கும் சடங்கு அங்குதான் எனக்கு செய்யப்பட்டது அதுமட்டுமல்லாமல்எங்களுடைய அனைவரது பிறந்த தின கொண்டாட்டமும் அங்குதான் இடம் பெற்றது.

இவ்வாறான பல நல்ல விடையங்கள் இந்த சவுக்கடி வீட்டில் எங்களுக்கு கிடைத்தது. இவை அனைத்தும் எங்களுக்கு கிடைத்தாலும் எங்களுடைய சமூகத்திற்குள்ளேயே நாங்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டோம். 2022 மற்றும் 2023ம் ஆண்டுகளில் கொழும்பில் நடத்தப்பட்ட **pride walk**ல் எங்களுக்கான அதாவது சிறுபாண்மையாக உள்ள தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை. 2022ம் ஆண்டு நடை பெற்ற **pride walk**ல் அந்த இடத்தில் நிகழ்ச்சிகள் செய்வதற்கோ அல்லது முன்னிண்டு நடத்துவதற்கோ எங்களை உள்வாங்கவில்லை அத்துடன் அது பற்றி தெரியப்படுத்தவும் இல்லை. அதனை நான் கேட்டபோது என்னிடம் அவர்கள் கூறினார்கள் அவசரமாக நாங்கள் திட்டமிட்டமையால் எங்களுக்கு உள்வாங்குவது கடினமாகிவிட்டது. எதிர்காலத்தில் சேர்த்துகொள்ளுவோம் என்றனர்.

பின்பு 2023இல் நடத்தப்பட்ட **pride walk**ல் அதே தவறை திரும்பவும் செய்தனர். எங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதனால் எனக்கு மிகுந்த கவலை மற்றும் கோபம் ஏற்பட்டது. அதனால் நிகழ்ச்சி நேரத்தில் நான் மேடையில் ஏறி எங்களுடைய மனதில் இருந்த கவலையை ஒரு சுமூகமான முறைல் வெளிப்படுத்தினேன், கடைசியில் நாங்கள்தான் அந்த விழாவை குழப்பினோம் என்ற கருத்து எங்களுக்குள் எழுந்தது. இன்றுவரை அதாவது 2024வும் ஆண்டு இந்த பிரச்சினை தொடர்ந்த வண்ணமே உள்ளது இன்றுவரையில் அந்த பாராபட்சத்திற்குள்ளே ஒரு குழுவாக இயங்கி வருகிறோம்.

**- மீரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துவின் கதை

"இந்த மீசை தாடி என்னை விட்டபாடில்ல கடவுளே. என்னோட பெண்மைய கெடுக்கிதே. மஞ்சள் பூசிப் பார்த்தன் அதையும் தாண்டி வளருது. ஷேவிங் செட், மஞ்சள் டப்பா, மேக்கப் திங்கஸ யாருக்குமே தெரியாம மறச்சு வெக்கவும் முடியல்ல. இங்க ஒளிச்சு வெச்சிடுவோம்!"

அங்குமிங்கும் பார்த்தவளாக ரமேஸ் என்ற பெயர் அடையாள அட்டையுடைய சிந்து கட்டிலின் அருகே அழகுசாதனப் பொருட்களை பத்திரமாக மறைத்து வைக்கிறாள்..

"இன்றைக்கு வீட்டுல யாருமே இல்ல. எல்லாரும் திருவிழாக்கு போயிட்டாங்க. வாரதுக்கு நாளுநாளாகும்னு அம்மா சொன்னவ. இந்த நாளு நாளுல இன்னைக்கு நீ நீயா வாழனும்டி சிந்து. வாழ்ந்துடு"

இறுக்கமான கட்டொன்று தளர்ந்த ஆனந்த வெள்ளத்தில் ஆட்டம் பாட்டமாக துள்ளிக் குதித்த சிந்து கதவை அடைத்தவள் உட்தாட்பாழ் இட மறந்தே போனாள்! ஆனந்தமாக அலங்காரங்கள் செய்து அம்மாவின் சேலையை அற்புதமாக உடுத்தாள் இவள்.

"இஞ்ச... வீட்டுல திருவிழாக்கு போய் கட்ட வெச்சிருந்த சேலைய விட்டுட்டு வந்திட்டன். வாங்க போய் எடுத்திட்டு வருவோம்"

என்று சிந்துவின் அம்மாவின் மறதி தீயாகியது.

"அட கடவுளே போற வழில ஞாபகம் வந்ததே நல்ல வேளை. உன் ஞாபக மறதிக்கு என்னத்த சொல்ல. சரி சரி நட நட" என்றார் அப்பா.

அண்ணன் குணா வாகனத்தை திருப்பி வீட்டுக்கு செலுத்தினான்.

சாத்தியிருந்த கதவை திறந்தவர்கள் ரமேஸை திருவிழாச் சேலையில் காண்கின்றனர்.

"என்ட கடவுளே டேய் ரமேஸ் இதென்னடா கோலம். பொட்ட மாதிரி சேலை கட்டி. கிறுக்காகிட்டியாடா? இஞ்ச பாருங்க இவன"

"டேய் என்னடா இது? ஊருக்கு உன்ன என்ட தம்பி என்று சொல்லவே முடியல்ல. பொட்டைட அண்ணா போறான் என்று கதைக்கானுங்க. இப்ப பொட்ட மாதிரி பொடவ கட்டி என்னடா இது??"

"டேய் ரமேஸ் உனக்கு என்னடா நடந்த? ஏன்டா இப்டி பன்றாய்? எனக்கு வார ஆத்துறதுக்கு. நம்மட குடும்பத்துல யாருமே இப்படி இல்ல. ஊர் சனத்துக்கு தெரிஞ்சா ரோசம் மானம் போயிடும். அடியே அந்த பிரம்ப கொண்டு வாடி இவன சாத்த"

"அப்பா அப்பா அடிக்காதிங்கப்பா..."

"அந்த சேலைய கலட்டுடா பொட்ட கன்றாவியா இருக்கு" என்றவாறே அண்ணன் உருவினான்!

"ஓ..." என்று அழுதவளாக அம்மா அலருகிறாள்.

"அப்பா நான் ஒரு திருநங்கைப்பா என்னால என்னோட உணர்வுகளை அடக்க முடியல்லப்பா. என்ன அடிக்காதிங்கப்பா. நான் இனிமே இப்டி பன்னமாட்டேன்"

"உணர்வா என்னடா உணர்வு அது அடக்கிக முடியாத உணர்வு. எல்லாத்துக்கும் காரணம் இந்த முடிதான் இத மொட்டையடிச்சா இவன் திருந்துவான். அம்மா அந்த கத்தரிகோல கொண்டுவா இத முழுசா வெட்டினாத்தான் சரி"

"அண்ணா அண்ணா, அம்மா அம்மா ப்ளீஸமா என்ன விடுங்கமா முடிய வெட்ட வேணாம்னு சொல்லுமா"

"ச்சீ போடா நாயே. குணா அவன் முடிய வெட்டுடா" என்றாள் தாய்.

தகப்பன் கையை இறுக்கிப் பிடிக்க அவளது அழகிய முடியை முழுமையாக வழித்தான்.

"அம்மா இந்த நாய இன்டைக்கு வெறும் தண்ணி மட்டும் கொடுத்து பட்டினி போடு. அப்பதான் திருந்தி ஆம்பளயா நடப்பான். அதன்னெடா டப்பால?? பாருங்க அம்மா அப்பா, லிப்ஸ்டிக், மஞ்சள் பொடி, எல்லாமே பொம்பளைங்க ஐட்டமா வெச்சிருக்கான். இவனுக்கு இதெல்லாம் எப்படி கிடைச்சது. மானத்த வாங்குறான். எல்லாத்தையும் குப்பைல தூக்கி போடுங்கப்பா."


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்மை வெளிப்பட்ட தண்டனைக்காக இரண்டு இரவுகள் சிந்து வீட்டுச் சிறையில் அடைக்கப்படலானாள்..

சித்திரவதை தாங்க முடியாத சிந்து, யாருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக வீட்டின் மதிலால் குதித்து தப்பிக்கிறாள்.

இரவில் ஈசல்களின் ஓலம். நடுநிசி சத்தம் அவளை பயமூட்டுகிறது. பஸ்தரிப்பு நிலையத்தில் தஞ்சமடைகிறாள். அப்போது குடிபோதையில் வந்த ஒருவன் இவளோடு தகறாரு செய்கிறான்.

அவள் கதறுகிறாள், தப்பிக்க பார்க்கிறாள். இறுக்கிப் பிடிக்கிறான்.

ஆள் நடமாட்டமற்ற அந்த வழியில் ஸ்கூட்டியில் வேலை முடித்து வந்துகொண்டிருந்த சிந்துவின் நண்பி இவளை அடையாளம் காண்கிறாள். அவளும் ஓர் திருநங்கை. பெயர் மீரா. இருவரும் இணைபிரியா சிநேகிதிகள்.

மீரா இந்த குடிவெறியனை அடித்து விரட்டி சிந்துவை காப்பாற்றுகிறாள்.

"சிந்து என்னடி இது? இந்த நேரம் இங்க என்னடி செய்ற? என்ன பிரச்சின? இதென்ன கோலம்? என்ன நடந்தனு சொல்லு? இந்தா முதல்ல இந்த தண்ணிய குடி..."

என்றவாறு தனது பைக்குள்ளிருந்து தண்ணீர் போத்தலை மீரா எடுத்துக் கொடுக்கிறாள்.

"சரி ரிலேக்ஸ். வா முதல்ல உன்ன உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போறன் நீ மொதல்ல பைக்ல ஏறு"

"இல்ல வேணாம்டி மீரா. வீட்லதான் பிரச்சின. என்ன அவங்களுக்கு பிடிக்கல்ல. என்ன பற்றி தெரிஞ்சிடிச்சு. என்னோட பெண்மையை அவங்க ஏற்றுக்கொள்ளல்ல. அடிச்சி துன்புறுத்திட்டாங்க. என்ன பற்றி உனக்கு நல்லாவே தெரியும் நான் ஒரு திருநங்கைனு. நீ என்ன ஆதரிக்கிறாய். ஆனால் என்ன பெத்தவங்க, குடும்பம் என்ன வெறுக்குது. என்ன உலகம் இது. வாழ்க்கையே வெறுத்துட்டுடி."

சரி நீ ஒன்னும் யோசிக்காத நான் இருக்கன். வா நீ எங்க வீட்டுக்கு போகலாம். நீ ஆசைப்பட்ட போல ஜெண்டர மாத்திக்கோ, மோடலிங் பீல்ட்ல படிச்சு பெரிய ஆர்டிஸ்ஸா வாரதுக்கு நான் உனக்கு சப்போர்ட் பன்றேன். எனக்கு தெரிஞ்ச ஒரு இன்ஸ்டியூட் இருக்கு. அங்க போயிட்டு நீ நல்லா படிச்சு பெரிய ஆர்ட்டிஸ்ஸா வந்து சாதிச்சு காட்டு. நான் உனக்கு சப்போர்ட்டா இருக்கேன். நீ இனி ரமேஸ் இல்ல ஊருக்கு உலகத்துக்கும் சிந்துதான்..."

"எல்லாம் ஓகேடி மீரா. ஆனால் எனக்கு ஒரு வேலை இல்லாம எதுவுமே பார்க்க முடியாதுமா..."

"நீ கவலப்படாத, என்னோட கம்பனில உனக்கு வேல வாங்கி தாரேன்."

மறுநாள் சிந்துவை மீரா தனது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று பாஸிடம் சிந்து பற்றி அறிமுப்படுத்தி ஒரு வேலை கேட்கிறாள். அந்த பாஸ் நல்லவர் திருநர்களை ஆதரிக்கும் மனப்பாங்குள்ளவர். அவளுக்கு அலுவலகத்தில் அட்டண்டெண்ட் வேலை போட்டுக் கொடுக்கிறார்..

சிந்து முறையாக ஹார்மோன் சிகிச்சை மேற்கொள்ள செல்கிறாள்.

அங்கு வைத்தியர் சிந்துவைப் பரிசோதிக்கிறார். சிந்துவின் பெண்மையை ஆதரிக்காத நிலையில் வைத்திய துறையினர் அவளை ஏனோ தானோவென அசட்டையாக நடத்துகிறார்கள்.

"என்ன உனக்கு பிரச்சின நீ வடிவான ஆம்பள போலதானே இருக்காய்? ஆம்பளையா மாற ட்ரை பன்னலாமே ஹார்மோன் எடுத்து வாழ்க்கைய நாசம் பன்ன வேணுமா? இது ஒரு சீரழிவு. கும்பலா வருதுகள்! நேரஸ் அந்த ஜெண்டர் டிஸ்போரியா பைலுக்க ஆள முதல்ல போடுங்க. பிறகு மத்தத பார்ப்போம். போய் மருந்த வாங்கிட்டு போ. டிஸ்பன்சரில இந்த மருந்து இருக்க வாய்ப்பில்ல கடைல போய் வாங்கு. அடுத்த மாசம் கிளினிக் வந்தாத்தான் அடுத்த கட்டங்கள பார்க்கலாம்"

இப்படியாக அந்த வைத்தியர் அவளோடு கடினமாக நடந்துகொண்டார்.

அடுத்த மாதம் மீராவுடன் வைத்தியசாலை கிளினிக்கு செல்கிறாள் சிந்து.

அன்றைக்கு போல் இன்றும் குறித்த வைத்தியர் இவளை தரக்குறைவாக நடத்துகிறார்.

"இந்த ஹார்மோன் மருந்து வெளிலதான் வாங்கனும். யூரீன் செக் பன்னனும் போய்ட்டு யூரீன் ரிபோர்ட் எடுத்து வா"

"ஓகே டாக்டர்"

சிந்து ஆண்கள் கழிப்பறைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறாள். மீரா வெளியில் நிற்கிறாள். உள்ளே இருந்து அலறியபடி சிந்து வருகிறாள்.

"என்ன என்ன நடந்தது? சொல்லுடி சிந்து??"

"உள்ளே ஒருத்தன் என்னோட தப்பா நடக்க பார்த்தான்"

என்றபடி அழுதாள்.

"யாரது???"

என்று கோபமாக சீறிய மீரா அவனோட சண்டையிட தொடங்கினாள்.

"மீரா விடு. இந்த விசயத்த பெரிசு பன்ன வேணாம். திருநங்கையா பிறந்தா சகித்துத்தான் ஆகனும்டி. எனக்கு இப்ப மனசு சரில்ல. வா டாக்டர் கிட்ட போய் இத சொல்லுவோம்."

நடந்த விடயங்களை டாக்டரிம் சொல்கிறாள் சிந்து.

"அதான்பா சொல்லுற இப்படி பொம்பளையா மாற வந்தா இந்த மாதிரி பிரச்சினைகள் வரும். தேவையா இதெல்லாம்? நீயா தேடின முடிவு இது. நாங்க உனக்கு மருந்து மட்டும்தான் தரலாம்"

வைத்தியரின் வார்த்தைகள் வெந்த புண்ணில் வேல் பாய்வதாய் மனசுடைந்து விரக்தியடைந்த சிந்துஅவர் முன் ஒப்பாரியிட்டு கதறியழத் தொடங்கினாள்.

"ஏன் டாக்டர் நீங்களும் இப்படி என்ன ட்ரீட் பன்றீங்க. நாங்க என்ன பாவம் செஞ்சோம். எனக்கு ரொம்பவே கஷ்டமா இருக்கு வாழ்க்கையே வெறுக்குது. நான் பேசாம செத்துர்ரன் டாக்டர்"

என்றபடி ஓவென்று அவள் அழுது கொண்டே ஆக்ரோசமடையத் தொடங்கினாள். மீரா இவளை சமாதானப்படுத்த முயல்கிறாள் முடியவில்லை.

வைத்தியர், சிந்துவை மனநல வாட் பிரிவில் அனுமதிக்க வைக்கிறார்.

அன்றிரவு அங்கு தங்குகிறாள் சிந்து. மீராவுக்கு சிந்துவின் நிலை கடுமையான கவலையை ஏற்படுத்தியது.

சிந்துவை இந்த வைத்தியசாலையை விட்டு வேறொரு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று ஹார்மோன் சிகிச்சை எடுக்க வைக்கிறாள் அவள்.

அங்கு சிந்துவை நன்றாக கவனிக்கிறார்கள். அவள் நினைத்த பெண்மையை அடைகிறாள். வாழ்வில் பேரானந்தம் கொண்டு மீண்டும் பிறக்கிறாள்.

சிந்து ஆசைப் பட்டதைப் போல மோடலிங் துறைக்கு சென்று மிஸ் ரான்ஸ் குயீன் விருதுகளை பெறுகிறாள்.

அனைத்து பொழுதிலும் தன்னையுணர்ந்து பலமாக நின்ற மீராவின் நட்பு ஓர் பெரும் வரம் சிந்துக்கு.

சிந்துவின் அழகு மற்றும் மோடலிங் சாதனைகளை சமூக ஊடகங்கள் தொலைக் காட்சிகளில் கண்ணுற்று பெருமையடைந்த அவளது குடும்பம் இவளை மகளாகவே ஏற்றுக்கொள்கிறது.

**- மஹதி**

## சுயமரியாதை

**கு**யர் சமூகத்தில் 'சுயமரியாதை' மற்றும் 'அழைக்கும் விதம்' என்பன மிகவும் முக்கியமான அம்சங்களாகும். அவையே தமது சுயத்தின் அடையாளத்தை பிரதிபலித்து ஆசுவாசப் படுத்தக்கூடிய நோக்குநிலைகளாகும்.

அந்தவகையில் பொதுவாக குயர் நபர் ஒருவர் தான் சுயத்தில் உணருகின்ற அடையாளத்தை பிரதிபலிக்க "(She / Her)", "(He / Him)", "(They / Them)", "(She / They)", "(He / They)" முதலான ஆங்கில அழைப்புச் சுட்டுக்களின் மூலமாக சமூக நபர்களின் மத்தியில் அடையாளப்படுத்திக் கொள்வார்.

இந்த சுட்டு விகுதிகள் உளவியலோடு நெருங்கிய தொடர்புடையனவாகும். அதற்கு புறம்பாக (சுயத்தை மதிக்காது / ஏற்காது) அமையும் அழைப்பு அம்சங்கள் எந்தளவுக்கு உளவியலோடு தாக்கமுறுகிறது என்பதை பின்வரும் கவிதை உணர்த்தும்.

**-V. கேசிக்கா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுவாழ்வு



**மீ**ன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்புதான் எனது சொந்த ஊர். அம்மா, அப்பா, ஒரு சகோதரி, ஒரு சகோதரன். நான் இரண்டாவது பிள்ளை. நான் மட்டக்களப்பில் அமைந்துள்ள புனித பெண்கள் தேசிய பாடசாலையில் உயர் தரம் வரை கல்வி கற்றுள்ளேன். தொடர்ந்து பாலர் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டு இருந்தேன். எங்கு செல்வது என்றாலும் உலகம் சுற்றும் வாலிபர்கள் போல் நானும் நண்பிகளும் எங்கும் சுற்றித் திரிந்தோம். திரிந்ததின் பலன் எங்களுக்கு ஒரு நண்பர் கிடைத்தார். காத்தான்குடியைச் சேர்ந்தவர். நானும் எனது நண்பிகளும் போட்டி போட்டு அவருடன் கதைப்போம். எங்களுக்குள் பந்தையம் போடுவோம் யார் அவரை மிக நெருங்கிய நண்பராக்குவது என. எனினும் அவர் கூடுதலாக என்னுடன் நட்பை வளர்த்துக் கொண்டார். அதன் பிற்பாடு எனது தோழிகள் எல்லாம் ஒவ்வொருவராக என்னை விட்டு பிரிந்து சென்றுவிட்டனர். நட்பு காதலாக மலர்ந்தது. நான் வேதம் என்பதினாலும் அவர் முஸ்லீம் என்பதினாலும் எங்கள் வீட்டில் எங்கள் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்க மாட்டார்கள் என்பதினால், நாங்கள் இருவரும் அவரின் அம்மா வீட்டிற்கு ஓடிப்போனோம். அங்கு எனக்கு குறான் ஓதி அவர்களின் மதத்தின் அடிப்படையில் திருமணம் நிறைவேறியது. அப்போது முழுப்போர்வைக்குள் முக்காடு போட்டு வெளியில் முகம் காட்டுவது எனக்குள் ஒரு கவலையைத் தந்தது. நான் நினைத்தேன் நானாக தேடிய வாழ்கைதானே போகப் போகப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம் என என்னை நானே ஆறுதல் படுத்தினேன். என்றாலும் அந்த உடைக்குள் என்னை பழக்கப்படுத்துவது எனக்கு கஸ்ரமாகவே காணப்பட்டது. எனது மாமியும் மச்சாளும் என்னுடன் நல்லா பழகுவார்கள். அவர்களின் உதவியுடன் எனது வாழ்க்கை சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. அதன் பிற்பாடுதான் தெரியும் எனது கணவர் ஒரு மீன் வியாபாரி என.


நான் முதற்பிள்ளையை சுமக்கத் தொடங்கினேன். அப்போது எனது உறவுகளை பார்க்க வேண்டும் போல் இருக்கும். ஆனால் பார்க்க முடியாது. அவர்களும் பார்க்கவர மாட்டார்கள். என்னதான் இருந்தாலும் பழகப் பழக இந்த வாழ்க்கை பிடித்த வாழ்க்கையாக மாறியது. எனக்கு மகள் கிடைத்தாள். கிடைத்தவுடன் எனது அம்மா எனது பெண் குழந்தையையும் என்னையும் வாழ்த்திவிட்டுச் சென்றார். அதன் பின் நான்கு பிள்ளைகள் இரண்டு ஆண்களும் இரண்டு பெண் குழந்தைகளும். இவர் ஒரு கூலி தொழிலாளி என்பதினால் ஆரம்ப கால உழைப்பு குடும்ப செலவுக்கு போதுமானதாக இருந்தது. திருமணம் முடித்த ஐந்து வருடங்களாக மாமியாரின் வீட்டில் வசித்து வந்தேன். நான் திருமணம் முடித்து வந்ததன் காரணமாக எனது தொழிலையும் விட்டு விட்டேன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் நான்கு பேர் ஆகிவிட்டனர். இவர்களின் படிப்பு செலவு ஏனைய செலவுகள் நாட்டின் பொருளாதாரக் கஸ்ரம், பொருட்களின் விலையேற்றம் காரணமாக வீட்டில் பண கஸ்ரம் தாண்டவம் ஆடியது. இருவருக்கும் சண்டைகள் ஏற்படும். இவரின் துன்புறுத்தல் எனக்குள் வேதனைகளைத் தரும். எனக்கு என்று தொழிலும் இல்லை. வளவும் இல்லை. எனக்குள் நானே மனமுடைந்து வாழத் தொடங்கினேன். அதைப் போல் எனது பிள்ளைகளும் மனம் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்திற்கு ஆளாகினர். கணவர் எப்படி என்னைத் துன்புறுத்தினாலும் கேட்பதற்கு யாரும் இல்லாத அநாதையாக இங்கு இருந்தேன். என்னையோ எனது பிள்ளைகளையோ எனது அம்மா வீட்டிற்குச் செல்ல விடமாட்டார். சென்றால் அதற்கும் சண்டை. ஒருநாள் பிரச்சனையை பள்ளிவாயல் சம்மேளனத்தில் கொடுத்தேன். அவர்கள் எங்களுக்கு ஒரு வளவு தந்து சேர்த்து வைத்து விட்டார்கள். அங்கும் சண்டைகள் தொடர்ந்து கொண்டே சென்றது. இனி எங்கும் செல்வதில்லை பிள்ளைகளுடன் அடி உதை வாங்குவதுதான் என்ற யோசனையுடன் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

இந்த சமயத்தில்தான் எங்கள் ஒல்லிக்குள கிராமத்தில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் பெண்களுக்கு ஒரு சங்கத்தை ஆரம்பித்தார்கள். அந்த சங்கத்தில் நானும் இணைந்து கொண்டேன். ஆரம்பத்தில் அக் கூட்டத்திற்குப் போனால் யாருடனும் பேச மாட்டேன். ஒரு ஓரமாய் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பேன். அது எனது மனதிற்கும் வாழ்க்கைக்கும் பெரும் உதவியாக இருந்தது. இதில் முதலாவதாக தலைமைத்துவப் பயிற்சி வகுப்புக்கள் எங்களுக்கு அளிக்கப்பட்டது. அதில் இருந்து சிலதை கற்றுக் கொள்ளத் தொடங்கினேன். பின்பு பெண்களின் சுயதொழில் சார்ந்து, சேமிப்பு சார்ந்து பெண்கள் எப்படி வலுப்படல், சுரண்டல், ஆளுமை, வளம் சார்ந்து பெண்களுக்கு ஏற்ற மாதிரி இந்தக் கூட்டத்தைக் கொண்டு சென்றார்கள். அதன் பிற்பாடு எனக்குள் ஒரு மாற்றம் வந்தது. எல்லா அம்மாமாரும் பாய் இழைத்துதானே குடும்பத்தை நடாத்துகின்றார்கள். நானும் அத்தொழிலைச் செய்தால் என்னிடமும் பணம் இருக்கும் என யோசித்தேன். பாய் இழைக்கப் பழகினேன். என்னால் முடிந்த அளவு இழைத்தேன் விற்பனை செய்தேன். ஆடைகள் தைக்கத் தொடங்கினேன். தற்போது பாய் இழைத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது என்னிடம் சிறு வருமானம் வருகின்றது. அவரை நம்பி எல்லா செலவுகளுக்கும் பணம் கேட்க வேண்டும் என்று இல்லை. தற்போது எனக்கும் கணவருக்கும் சண்டை ஏற்பட்டாலும் சங்கத்தில் இருக்கும் பெண்கள் என்னுடனும் அவருடனும் கலந்துரையாடுவார்கள். என்னை அவர்களின் வீட்டில் மறைத்து வைத்து பாதுகாத்து அவர்களாகவே சூரியாவிடம் கூட்டி வந்து கதைத்து எனக்கு நியாயம் கிடைக்கும்படி செய்வார்கள். பெண்கள் சங்கம் எங்கள் ஊரில் இருந்தமையால் மனதுக்கு சிறு ஆறுதல். கைத்தொழில் செய்து கொண்டிருக்கிறேன். எனது பிள்ளைகள் நான் என்ற உணர்வுடன் வாழ்வதால் அவரின் கத்தல் செல்லுபடியற்றது. மௌனத்தின் ஊடே தற்போது எமது சங்கத்தில் நான் ஒரு செயலாளராக செயற்படுகின்றேன். ஆசைகளுடன் முடங்கி விடாது பயணிக்கிறேன்.

**- லோகநாயகி**




# வினா ?

**சி**றகுகள் சிதைக்கப்பட்ட
செங் குருவியாய்
உணர்வுகள் உடைக்கப்பட்ட
உருவமாய் நான். இன்று
வெறுமையாய் இருந்து
விடை தேடுகிறேன்
எனக்காய் நான்!

**- அராலியூர்**
**மகேஸ்வரி ராஜினி**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "ஒரு பிராயச்சித்தம் நூறு சரிகளுக்குச் சமம்"



ஒரு பிராயச்சித்தம் நூறு சரிகளுக்குச் சமம்" என்ற ஷோபாசக்தியின் சிறுகதை வாசகத்தோடு எனது கட்டுரையை எழுதத் துவங்குகின்றேன்.

இந்தக் கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் எமது நாட்டின் அடுத்த அதிமேதகு ஜனாதிபதியை தீர்மானிக்கும் தேர்தலுக்கான பரப்புரைகள் நடந்து கொண்டிருக்கின்றது. மிகவும் அவசரமாக ஜனாஸா எரிப்பு சம்பவம் தொடர்பாக அரசு தரப்பில் இருந்து மன்னிப்புக் கேட்க பட்டது.இது இந்நாட்டின் அரசியலுக்கு புதிதான விடயம் அல்ல. காலத்திற்கு காலம் இலங்கையின் பேரினவாதம் சிறுபான்மை மக்கள் மீது கட்டவிழ்த்து விடும் அநீதிகளுக்கு தேர்தல் காலங்களில் மன்னிப்புக் கோரும் சந்தர்ப்பங்கள் வரலாற்றில் பல முறை இடம் பெற்றுள்ளது. உதாரணத்திற்கு கறுப்பு ஜூலை என்கிற பெயரில் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட அநீதிகளுக்கு அப்போதைய ஆளும் தரப்பு மன்னிப்பு கூறிய சந்தர்ப்பத்தை இங்கே கூறலாம்.

மனிதனின் வாழ்வியலோடு ஒன்றிப் போயிருந்த மதச்சம்பிரதாயங்களும், வழக்காறு களுமே பிற்பாடு சட்டங்களாக தொகுக்கப்பட்டதை சட்டத்தின் வரலாற்றுப் பாதையிலிருந்து அறிய முடிகிறது. அவ்வாறு உயரிய இடத்தில் உள்ள மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான மதரீதியான வழக்கங்களை சிதைப்பதன் மூலம் ஒரு நாட்டில் உள்ள சிறுபான்மை மக்களின் இருப்பானது கேள்விக்குறப்படுத்தப் படுகிறது.

இதனடிப்படையில் கொவிட் காலத்தில் இடம்பெற்ற ஜனாசா எரிப்பு தொடர்பாக பரந்துபட்ட விமர்சனங்களை வைக்க முடிகிறது. உலக சுகாதார ஸ்தாபனமானது கொவிட் இனால் இறந்த உடல்களை புதைப்பது மூலம் கிருமிகள் தொற்றாது என குறிப்பிட்டாலும், இலங்கையில் உள்ள பல வைத்தியர்களும், படித்த சமூகமும் இது பற்றி தெளிவு வழங்கிய போதும் ஜனாஸா எரிப்பானது அன்றைய பேரினவாத அரசின் நீடித்திருப்பதற்கு அல்லது மக்களை திசை திருப்புவதற்குரிய கருவியாக காணப்பட்டது எனலாம்.

பிறந்து 20 நாட்களேயான சிசு உட்பட கொவிட் தொற்றால் உயிர் இழக்காதவர்களை கூட எரித்த சம்பவங்களும் இடம்பெற்றன. 44 வயதுடைய கொவிட்டினால் மரணமடையாத தனது தாயை எரித்தமை பற்றி ஒரு மகன் ஒருவர் கூறும் போது 'என்னுடைய தந்தை இதை நினைத்து நாள் முழுவதுமே அழுது கொண்டிருந்தார்.என் மனைவி இறந்ததை என்னால் ஏற்க முடியும் என்றாலும் அவள் எரியூட்டப்பட்டமையினை என் வாழ்நாள் முழுவதும் ஏற்க முடியாது" என கூறியதாக அல் ஜெசிரா இணையத்தளம் செய்து வெளியிட்டிருந்தது.

அதேபோல் இவ்வாறான மரணங்கள் நிகழ்ந்த போது எவ்விதமான போதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களும் வழங்கப்படவில்லை. இறந்தவர்களின் உடலை எரிக்க சம்மதம் தெரிவிக்க வழங்கப் பட்டுள்ளதாக குறிப்பிட்ட படிவங்களில் என்ன இருந்தது என்பதைக்கூட வாசித்து விளங்கவும் நேரமும், மொழிப்பிரச்சினைகளும் காணப்பட்ட தாகவும் பலர் குறிப்பிட்டிருந்தனர். இது தகவல் அறிவதற்காக காணப்படும் உரிமையின் மீது சேறு பூசும் செயலாகவே காணப்படுகிறது எனலாம்.

ஜனாஸா எரிப்பு தொடர்பில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான மனுக்கள் உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டும் இருபதாவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதியின் மீயுயர் அதிகாரத்தினால் ஆளுகைக்கு உட்பட்டு எவ்வித காரணமும் இன்றி தள்ளுபடி செய்யப்பட்டன.

2019 ஏப்ரல் தாக்குதலின் பின் முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த இனவாத அடக்குமுறை மற்றும் அரசியல் இலாபங்களுக்கு இந்த ஜனாஸா எரிப்பானது மிக முக்கிய உத்தியாகவே காணப்பட்டது. சமூக வலைத்தளங்களிலும் முஸ்லிம்கள் கொரோனா வைரஸினை பரப்புகிறார்கள் என்ற கோஷம் வலுப்பெற்றிருந்தது. இந்தியாவிலும் கொவிட் ஜிகாத் என்ற பெயரில் முஸ்லிம்களே இந்த வைரஸை ப் பரப்பினர் என பரவலாக குற்றஞ் சாட்டப்பட்ட விடயத்தையும் இதனுடன் ஒப்பிட்டு நோக்கக் கூடியதாக இருக்கிறது.

என்னை பொறுத்தவரை இலங்கை வரலாற்றில் ஜனாஸா எரிப்பானது கட்டாயமாக பதிவுசெய்யப்பட வேண்டும். ஜனாஸா எரிப்பு தொடர்பில் போதுமான விசாரணைகள் நடைபெற வேண்டும். எழுத்துக்களிலும், இலக்கியங்களிலும், கலைகளிலும் இவை சாட்சியப்படுத்த வேண்டும். இதுவே சிறுபான்மையினரின் மையத்துக்களின் மேலே நிகழ்த்தப்பட்ட மாபெரும் உரிமை மறுப்பிற்கான குறைந்தபட்ச அத்தாட்சியாக அமையும் என்றால் மறுப்பதற்கில்லை.

**- நசீகா**

---

# குழந்தைகளின் அவலம்



குழந்தைகள் தெய்வத்தின் வடிவு என்பர் பால் வடியும் முகத்தின் புன்சிரிப்பில் மயங்காதவர் எவருமில்லை. வாய் திறந்து பேசும் அழகான வார்த்தையில் அவர்கள் அழகே அழகு இவற்றுக்கெல்லாம் நடுவில் இறைவன் அருள் வாக்குக் கொடுப்பது போல் இவர்களின் மழலைப் பேச்சு. இவற்றையெல்லாம் ரசிக்காமல் அப் பிஞ்சு குழந்தைகள் என்ன வஞ்சகம்தான் செய்தது? இவர்களின் உடலை கூறு போடுகின்றீர்களே இதுதான் உங்கள நீதியா? காம வெறி பிடித்த கயவர்களே நீங்கள் எக்குலத்தில் பிறந்தவர்கள். குழந்தைகள். இவ்வுலகில் வாழ வந்த அடுத்த சந்ததியின் மேதைகள். இவ்வுலகையே வலம் வரும் வண்ணச்சிறகடிக்கும் பட்டாம்பூச்சிகள்.

மின்மினியாய் ஒளிரும் தேவதைகள். மனிதா ஏன் இந்த அற்பம் மனிதா நீ சிந்தித்தாயா? இதில் என்னதான் உள்ளது? கடவுளுக்கும் குழந்தைக்கும் நடுவில் என்னதான் வித்தியாசம் உள்ளது. கடவுள் வேறு குழந்தை வேறு என பிரித்துப் பார்க்கின்றீர்களே, அடங்கா பிடாரி மனிதா பூமியில் நடப்பவை எல்லாம் எமது சிந்தனைக்கு எட்டிய வரை நடக்கிறது என நினைக்காதே. சட்டம் தன் ஒழுங்கான நீதியை செய்யா விட்டாலும் பூமித்தாய் என்பவள் சுட்டெரிப்பாள். நீ அழிவது உறுதி;

**- லோகநாயகி**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சாதி ஆதிக்கம்

**சா**தி என்பது இந்தியபாணியிலான சமூகத்தில் 'அடிப்படை சமூக அலகு' என பலகாலமாக பரிந்துரைக்கப்பட்டு வரும் மக்கள் மன பிரிவினை தோற்றம் ஆகும்.



பிறப்பின் அடிப்படையிலும் வேலைப் பிரிவினையிலும் இதன் தன்மை தங்கி உள்ளது. வங்கதேசம், பாகிஸ்தான், இலங்கை, இந்தியாவில் நிலவுகின்ற சாதி ஒருவரின் பிறப்பைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

சாதி அடிப்படையிலான சமூக நிலைமாற்ற அமைப்பு அதன் மூன்று முக்கிய இனக்குழுக்களான - இலங்கைத் தமிழர், சிங்களர், மலையகத் தமிழர் இடையே பெரிய பரப்பாக காணப்படுகிறது. சாதி ஒரு அமைப்பு. அது பண்டைய வரலாற்றிலிருந்து காலனித்துவ சகாப்தத்திற்கு விரிவானது.

இலங்கையில் வாழ்கின்ற தமிழர் சிங்களவர் தேசிய இனங்கள் தன்னகத்தே வலுவான சாதி அமைப்பைக் கொண்டிருக்கிறன.

தமிழரிடையேயான சாதி அமைப்பு பிரதேச வேற்றுமைகளை கொண்டுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம, கொழும்பு தமக்கே உரிய சாதி அமைப்பைக் கொண்டுள்ளன.

சிங்களவரிடையேயான சாதி அமைப்பு மலைநாட்டுச் சிங்களவர் கீழ்நாட்டுச் சிங்களவர் என பெரும் பிரிவினையைக் கொண்டிருக்கிறது.

பக்தவச்சல பாரதியின் கூற்றுப்படி. மானுடவியல் கோட்பாடு என்ற நூலில். சாதியத் தோற்றத்தை விளக்கும் ஆறு கோட்பாடுகள் உண்டு

- மரபு கோட்பாடு.
- தொழில் கோட்பாடு.
- சமயக் கோட்பாடு.
- அரசியற் கோட்பாடு.
- இனக் கோட்பாடு.
- படிமலர்சி கோட்பாடு என்பவை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அம்பேத்கர் கூறுகிறார், 'ஒரு சாதிக்குள் நடைபெறும் அகமண முறையே சாதியின் தோற்றத்துக்கு காரணம்' என்று.

**மரபு கோட்பாடு** : சாதியானது இறைவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதுவே மரபு கோட்பாடு. உதாரணம் பகவத்கீதை, மனுதர்மம், ரிக்வேதம்

**தொழில் கோட்பாடு**: சாதியானது மக்கள் குழுக்கள் செய்யும் தொழில் அடிப்படையில் அமைந்தது என்பது தொழில் கோட்பாடு.

**சமயக் கோட்பாடு**: சாதி முறைக்கு அடிப்படை சமயமே என்பது சமயக் கோட்பாடு.

**அரசியல் கோட்பாடு**: ஆதிக்க சாதியினர் தமது சலுகைகளை தக்கவைக்க ஏற்றவாறு அறுத்துக் கொண்ட அமைப்பே சாதி என்பது.

**படிமலர்சி கோட்பாடு**: ஆரியர்கள் இந்தியாவுக்கு புலம்பெயர்ந்தபோது தொல் திராவிடர்கள் அடிமை பற்றி நிறுவிய அமைப்பு சாதி.

யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது ஐந்து தினைகள் தொடர்புடைய பழங்குடி பற்றி. அதில் சாதி, தொழில், பட்டங்கள், கொடி போன்ற அடையாளங்கள் தோற்றம் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

குறிஞ்சித் தினையில் பின்வருமாறு உள்ளது.

சாதி : வேடுவர்
தொழில் : வேட்டை
பட்டங்கள்: வன்நியாள, எத்தோ
கொடி : இல்லை

..............................

சாதி : குறவர்
தொழில்: கூடைமுடைதல், குறிசொல்லல், பாம்புபிடித்தல்
பட்டங்கள்: இல்லை
கொடி : கழுதைக்கொடி

..............................

சாதி : சாண்டார்
தொழில் : எண்ணெய் உற்பத்தி
பட்டங்கள்: நாடார், சென்றார், சாணார்
கொடி : இல்லை

..............................

சாதி : பாதர்
தொழில் : பண்பாடுதல், இசைக்கருவி வசூலித்தல்
பட்டம் : இல்லை
கொடி : யாழ்க்கொடி

இப்படி பல குறிப்புகளைக் கூறுகின்றது.

- இலங்கையில் சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு
- பாடசாலை கல்வி
- வேலை வாய்ப்பு
- பாராளுமன்ற ஆசன ஒதுக்கீடு
- திருமணச் சட்டங்கள் போன்றவற்றில் இட ஒதுக்கீடு கிடையாது

### இலவச கல்வியும் சாதியும்

- **1940-1960 இலவச கல்வி** தேசிய மயமாக்கலுக்குப் பிறகு பஞ்சமர்களுக்கு கல்வி வாய்ப்பு அதிகரித்து.
- புத்தூரில் சமத்துவத்தை உறுதிப்படுத்த முயன்ற பாடசாலைகள் சாதியவாதிகளால் தாக்கப் பட்டன.
- இன்றும் பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், போன்ற அமைப்புக்களில் கூட ஆதிக்க சாதியினர் பெரும் பங்குவகிக் கின்றனர்.
- கல்வித்துறை நியமணம், இடமாற்றம், பதவி உயர்வு, போன்றவற்றில வேற்றுமை காட்டும் போக்கு தொடர்கிறது.
- யாழ்ப்பாண பல்கலைக்கழகங்கள் போன்ற ஒரு சில பல்கலைக்கழகங்களைத் தவிர ஏனைய பல்கலைக்கழகங்கள் சாதிபற்றிய வெளிப்படையான விவாதங்களுக்கு ஊக்கிவிப்பதில்லை.
- சாதி பற்றி விவாதிப்பது தமிழர்களிடையே ஒற்றுமையை சீர்குலைக்கும் என்று ஒரு கருத்தும் உண்டு
- கலாசாரம் என்ற கட்டமைப்பிற்குள் சாதி என்பது இன்றுவரை உள்ளது. எனினும் கல்வி என்ற கட்டமைப்பிற்குள் சாதி என்பது மறைமுகமாக இருந்தாலும் வெளிப் படைத்தன்மை இல்லாத போக்கு காணப்படுகிறது.
- 17ம், 18ம், 19ம் நூற்றாண்டுகளில் திண்ணைப்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


பள்ளிகளில் பஞ்சமர்கள் பிள்ளைகளுக்கான கல்வி வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

- 19ம் நூற்றாண்டில் அமெரிக்கன் சிலோன் கமிசன் கூட தனது தேவாலயத்தில் மற்றும் பள்ளிகளில் வெள்ளாளரினால் கோரப்பட்ட சாதி சலுகைகளுக்கு இடம் கொடுத்தது என மார்பம்பேர்த்தின் ஆய்வு குறிப்பிடுகின்றது.
- பல சைவ தமிழ் பள்ளிகள் பஞ்சமர்களுக்கு கல்வி வழங்க மறுத்ததும் உண்டு.
- 20ம் நூற்றாண்டில் சைவ மறுமலர்ச்சி இயக்கங்களில் சில தம் பாடசாலைகளில் பஞ்சமர்களுக்ளுக்கான கல்வி அவசியம் என்பதை உணர்த்தியது ஆனால் அது மிசநெறிபாடசாலைகளை எதிர்பதற்கான உத்தியாகவும் இருந்தது.
- சில மேல்தட்டு வெள்ளாளர் தங்கள் குழந்தைகளை இவர்களிடம் இருந்து பிரிப்பதற்கு பஞ்சமர்களுக்கான சில பாடசாலைகளை நிறுவுவதற்கு ஆதரவினை அளித்தனர்.

இன்றும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சாதிப்பாகுபாடு இருந்து வருகிறது. எனவே சாதி வேற்றுமை விட்டொழித்து மனிதர்களை மனிதராய் படிப்போம். என்றென்றும் இன மத சாதி பால் மொழி கடந்து மனிதராய் வாழ்வோம்.

**-அராலியூர்**
**மகேஸ்வரி ராஜினி**

# இளையோர் கடன்



எங்கள் உணவைப் பறித்தாய்
உடமையைப் பறித்தாய்
ஒரு வேளை சோற்றுக்கு
கால் கடுக்க வரிசையில்
நிற்க வைத்தாய்.

எங்களிடம் சுரண்டி வந்த
சொத்தில் உன் தொந்தி
வளர்ந்து தரையை தட்டுகிறது.
போதாதென்று
மீண்டும் எம்முன் வந்து நிற்கின்றாய்
நிறத் துண்டுகளும், பல சின்னங்களும்.....
நரி நல்லவன் வேடம் போட்டாலும்
நாய் ஆகிட முடியாது.

நாடகம் முடிந்ததும் வேடம் கலைந்திடும்
நாட்டின் கடன் இளையோர் முதுகில் ஏறிடும்
தப்பிச் சென்றது ஒரு கூட்டம்
தஞ்சம் புகுந்தது போரின் பெயரால்
இன்னும் முடியவில்லை...
தப்பி செல்கிறது ஒரு கூட்டம்
தஞ்சம் புகுகிறது பஞ்சத்தின் பெயரால்.

**- சௌமி**

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

இல. 4/1, தோமஸ் லேன்,

மட்டக்களப்பு,

இலங்கை.

**Suriya Women's Development Centre,**

No. 4/1, Thomas Lane,

Batticaloa,

Sri Lanka.

# வருடாந்த சந்தா - பெண்

**ஐரோப்பா, வட அமெரிக்கா,**
**அவுஸ்திரேலியா**
**US$ - 8**
**இந்தியா**
**ரூபா 500.00**
**இலங்கை**
**ரூபா 200.00**

**சந்தா விண்ணப்பம் 20**..............
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்**

பெயர் : ..........................................................................................

விலாசம் : ..........................................................................................

திகதி : ..........................................................................................

இத்துடன் காசோலை/ மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தி பேரில் அனுப்பி வைக்கிறேன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN : 1391-6122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org